உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

சிவார்ச்சனைத் திருமந்திரம்

(திருநாவுக்கரசு சுவாமிகள் திருவாய்மலர்ந்தருளிய
திருவாரூர்ப் போற்றித் திருத்தாண்டகம்)

மூலமும் குறிப்புரையும்

இது ஒவ்வொருவரும் பிரதிதினமும் காலையில்
நியமத்துடன் பாராயணஞ் செய்யத்தக்கது.

முதற்பதிப்பு—௫௲.

ஸ்ரீ பாலசுப்பிரமணிய நிலையம்.
ராயப்பேட்டை, சென்னை.

அக்ஷய வருஷம் வைகாசி மீ ௩௧௨

காப்பிரைட்] [விலை அணு ஒன்று.

உ

திருச்சிற்றம்பலம்

முகவுரை

அநாதியாகிய ஆணவாதி மலத்திரயங்களால் கட்டுண்டுழலும் ஆன்மாக்கள் உய்யுமாறு அநாதி மலமுத்தரும் நித்தியரும் சர்வவியாபகரும் சர்வகர்த்தரும் நித்தியானந்தரும் சுதந்திரருமாயுள்ள கருணைப்பெருங்கடலாகிய சிவபெருமான் ஆதியில் தமது தற்புருடம், அகோரம், வாமம், சத்தியோசாதம் என்னும் நான்கு திருமுகங்களினின்றும் முறையே இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என்னும் நான்கு வேதங்களையும், ஈசானம் என்னும் ஊர்த்துவ முகத்தினின்றும் காமிகாதி ஆகமங்கள் இருபத்தெட்டினையும் அருளிச் செய்தனர்.

ஈசானம்.—வடகீழ்த்திக்கை நோக்கிப் படிகமயமாய் விளங்கிநின்று மந்திர ஞானத்தைத் தோற்றுவித்து அனைத்தையும் ஆளுந்தன்மை யுடையது.

தற்புருடம்:—கிழக்குத்திக்கை நோக்கிக் கோங்கம்பூ நிறத்ததாய் விளங்கிநின்று அதிமார்க்க ஞானத்தைத் தோற்றுவித்து யாவற்றையும் காக்குந்தன்மை யுடையது.

அகோரம்:—தெற்குத்திக்கை நோக்கிக் கருநிறத்ததாய் விளங்கிநின்று ஆத்தியான்மிக ஞானத்தைத் தோற்றுவித்து எல்லாவற்றையும் அழிக்குந் தன்மையுடையது.

வாமம்:—வடக்குத் திக்கை நோக்கி வெட்சிப்பூ நிறத்ததாய் விளங்கிநின்று வைதிக ஞானத்தைத் தோற்றுவித்து அனைத்தையும் விளக்குந் தன்மையுடையது.

சத்தியோசாதம்:—மேற்குத்திக்கை நோக்கிப் பால் நிறத்ததாய் விளங்கிநின்று லௌகிக ஞானத்தைத் தோற்றுவித்து எவைகளையும் ஆக்குந் தன்மையுடையது.

பின்னர் ஒரு காலத்தில் பிரமதேவனது மானதபுத்திரராகிய சனகாதியர் அவ்வேதாகமங்களின் மெய்ப்பொருளைச் சிவபெருமானால் ஓங்காரவாயிலாக உபதேசிக்கப்பெற்று, அறம் பொருள் இன்பம் வீடு என நான்மறையாக இயற்றினார்கள். அப்பண்டைத் **தமிழ்நான்மறை** பல்லூழி நிலவி மறைய, பின்னர் அச்சிவபெருமானே திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள், திருநாவுக்கரசு சுவாமிகள், சுந்தரமூர்த்தி சுவாமிகள், மாணிக்கவாசக சுவாமிகள் ஆகிய இந்நான்கு சமயாசாரிய மூர்த்திகள்பால் அதிட்டித்து * நின்று அவர்களது திருமுகங்களினின்றும் தேவார திருவாசகமாம் தமிழ் வேதங்களையும், மெய்கண்டதேவர், அருணந்தி சிவாசாரியர், மறைஞானசம்பந்தர், உமாபதிசிவாசாரியர் ஆகிய இந்நான்கு சந்தானாசாரிய மூர்த்திகள்பால் அதிட்டித்து நின்று அவர்களது திருமுகங்களினின்றும் **சிவஞானபோதமென்னும்** உயர்ஞானநூலை இருதயமாகக் கொண்ட சிவாகமங்களையும் தோற்றுவித்தருளினார்.

மேற்கூறிய தமிழ் வேதங்களில்

திருஞானசம்பந்தமூர்த்திசுவாமிகள் அருளியவை		௧௬௲	பதிகங்கள்
திருநாவுக்கரசு சுவாமிகள்	,,	௪௯௲	,,
சுந்தரமூர்த்தி சுவாமிகள்	,,	௩௮௲	,,
ஆகப் பதிகங்கள்		௱௩௲	ஆகும்.

ஆனால் அவை எழுதப்பட்ட ஏடுகளிற் பெரும்பான்மை சிவபெருமானது திருவருளால் வன்மீக † மூடப்பட்டன. அதனால் மறைந்தவைபோக எஞ்சிநின்றவை

திருஞானசம்பந்தமூர்த்திசுவாமிகள்	௩௮௪	பதிகங்கள்
திருநாவுக்கரசு சுவாமிகள்	௩௧௨	,,
சுந்தரமூர்த்தி சுவாமிகள்	௱	,,
ஆகப் பதிகங்கள்	௭௯௬	ஆகும்.

* அதிட்டித்து - நிலைப்பட்டு

† வன்மீகம் - புற்று.

பின்னர் சமபந்தரும் நாவுக்கரசரும அருளிய பதிகங்கள முறையே மும்மூன்று திருமுறைகளாகவும், சுநதரர் அருளியவை ஏழாந திருமுறையாகவும் மாணிககவாசகர் அருளிய திருவாசகமும் திருசசிற றமபலக கோவையாரும் எட்டாந் திருமுறையாகவும் வகுக்கப்பட்டு அவற்றுடன் திருமாளிகைததேவர் சேநதனர் முதலியோர் அருளிச்செயத திருவிசைப்பா திருப்பலலாண்டுகள ஒன்பதாந திருமுறையாகவும், அறுபத்துமூன்று நாயன்மாரில ஒருவராகிய திருமூலர் அருளிசசெய்த திருமநதிரம பததாந் திருமுறையாகவும, திருவாலவாயுடைய சிவபிரான் திருவாய மலாந்தருளிய திருமுகப் பாசுரமுதலிய நாற்பது பிரபநதஙகளும பதினொராந திருமுறையாகவும, சேககிழார் அருளிசசெயத திருத்தொண்டா புராணம பன்னிரண்டாந திருமுறையாகவும் சேர்ககபபட்டன.

மேற்கூறிய சிவாகமமென்னும் சைவசிததாந்த சாத்திரம திருவுநதியார் முதல் சஙகறபநிராகரணம் இறுதியாக வரும பதினன்குமாம. அவற்றின் விவரம் பினவருமாறு:—

உயயவநததேவநாயனா	அருளிய	திருவுநதியார்	க
திருக்கடவூர் உய்யவந்ததேவ நாயனர்	,,	திருககளிறறுப்படியார்	உ
மெய்கண்டதேவா	,,	சிவஞானபோதம	௩
அருணநதிசிவாசாரிய சுவாமிகள	,,	சிவஞானசித்தியா	ச
		இருபாவிருபஃது	ரு
மனவாசகஙகடநதார்	,,	உண்மைவிளக்கம்	சு
உமாபதிசிவாசாரிய சுவாமிகள	,,	சிவப்பிரகாசம்	எ
		திருவருட்பயன்	அ
		வினவெண்பா	கூ
		போற்றிப்பஃறொடை	௰
		கொடிககவி	௰க
		நெஞ்சுவிடுதூது	௰உ
		உண்மைநெறிவிளககம	௰௩
		சங்கற்ப நிராகரணம்	௰ச

இத்தகைய சிறப்புவாய்ந்த தோத்திரப்பாகங்களும் சாத்திரப்பாகங்களுமாகிய அகண்டாகார சிவபோக மெனனும் பேரின்பவெள்ளம் சித்தாந்தசைவர்களாகிய நம்மனோர் மட்டுமேயன்றி ஏனைய ஆன்மகோடிகள் அனைவரும் சேர்ந்து புசிக்குமாறு பொங்கித் ததும்பிப் பூரணமாய் ஏகவுருவாய்க் கிடக்கின்றதென்பதை நம்மில் ஒரு மிகச்சிலரே அறிவர். ஏனையோர் பெறுதற்கரிய பிறவியைப்பெற்றும் பெறுதற்கரிய பிரானடிபேணாதவராய் இத்தகைய அரியநூல்கள் இருக்கின்றன என்பதைக் காதினாற் கேட்டறியாமலும் கேட்டறிய மனமில்லாமலும் சமயவுணர்ச்சி ஒரு சிறிதுமிலராய்த் தங்கள் வருணாசிரம தருமத்தினின்றும் வழுவித் தங்கள் குலாசாரங்களை அறவொழித்து நடுவுநிலைமையினீங்கிப் பெரும்பான்மையும் தீயவழியிலேயே ஏராளமாய்ப் பொருள் சம்பாதிக்கின்றனர். அன்றியும் அவர்கள் அவ்வாறு கிடைத்த பொருளில் ஒரு மிகச்சிறு பகுதியேனும் தக்கார்க்குதவாது தம் பெண்டிர் மக்களுடன் அறுசுவையுண்டியைப் புந்திமகிழுற உண்டும் பட்டாடைகளை உடுத்தும் விலையுயர்ந்த கனகரத்தினாபரணங்களை அணிந்தும், மற்றுமுள்ள நாடகம்பார்த்தல் வேசையரிணக்கம் மதுபான முதலியவற்றிற் செலவிட்டு அத்தகைய பொய்யுலக போகங்களை அனுபவித்தும் பின்னர்த் துன்பம்பயக்கும் இன்பமாந்துவதே போந்தநெறியென்றெண்ணி அவற்றிலேயே காலத்தைப்போக்கித் தங்கள் வாணாட்களை வீணாட்களாக்கிப் பெறுதற்கரிய பேறிழந்து வாளா மாழ்கின்றனர். வேறு சிலர் சமயவுண்மைகளைப் பிறழவுணர்ந்தும், தாமுணர்ந்தமுறையிற் குறுகிய அறிவினையுடைய நன்மக்களுக்குப் போதித்தும் தாங்கள் கெடுவதுடன் அவர்களையும் கெடுக்கின்றனர். இன்னோரது இப்பரிதாப நிலைமைக்கு ஒரு முக்கியகாரணம் நமது தேயத்தில் மெல்லெனப்புகுந்து நாளுக்குநாள் ஓங்கிவளர்ந்து உலாவித் திரிகின்ற பிறதேசப் போலிநாகரிகமாய நோயினால் நமது சைவமக்களிற் பலர் அநியாயமாய்ப் பீடிக்கப்பட்டுத் தமிழ மொழிஞானம் நிரம்பப்பெறாது, சிலர் சிறிது தமிழ்க் கல்வி பயின்றும், சிலர் தமிழ்க் கல்வியே பயிலாமலும்

இருப்பதே யாகும். இவ்வாறு பீடிக்கப்பட்டவர்களிற் சிலர் தமிழ் எழுதவாவது பேசவாவது படிக்கவாவது முடியாதவர்களா யிருப்பதுடன், தங்கள் குறையை ஒரு சிறுமையா யெண்ணுது பெருமையாகப் பாராட்டுகின்றனர். இதனுல் தமிழ் மாதாவானவள் அவர்களைத் தன் புதல்வராகக் கொள்ள நாணுகின்றுள். தமிழ்மொழிஞானம் நிரம்பப் பெற்று ஆய்ந்த நூற் கல்வி கேள்விகளினுலே நன்றிது, தீதிது, ஆவதிது, அல்லதிது, குணமிது, குற்றமிது என்ற உண்மை யறிவு முதிர்ந்து துறவடைந்தோரையுங் கூட இந் நோய் வருத்தாமல் விடவில்லை என்றுல், அந்தோ! இதன் கொடுமையை என்னென்று கூறுவாம். மேற்கூறிய நோயினுல் நம்மவர் பீடிக்கப்படுவதன் காரணம் அன்னோர் ஆங்கிலக் கல்வியாகிய அரியவுணவைக் குற்றமுலப்பிக் குணமுவந்து நெறிதெரிந்து முறையுணர்ந்து அளவறிந்து உண்ணுமையே யாகும். ஆங்கிலம் கற்கவிரும்புவோர் கற்கலாம். உயர்தரப் பரீட்சைகளிலே தேர்ந்து புகழையும் செல்வத்தையும் மிகுதியாய்ப் பெற முயலலாம். ஆனுல் அவ்வாறு முயல்வதிலே அவை யாவற்றிற்கும் தங்கள் சுதர்மமே மகுடமாய் விளங்குவது என்னும் உணர்ச்சியினை எப்போதும் உடையவர்களாய், அத் தாமத்தை அதி யூக்கத்துடன் வளர்க்கக் கடவர். இவ்விதம் சுதாமத்தை வளர்க்காது கைவிட்டுக் கற்ற கல்வியும் பெற்றபுகழும் அடைந்த செல்வமும் மங்கல நாணிழந்த மங்கையின் பேரழகையும் யௌவனத்தையும் ஆடையாபரணங்களையுமே நிகர்க்கும்.

நிற்க, மற்றொரு பகுதியினர் தங்கள் சமயக் கொள்கைகளையும் சாத்திரங்களையும் ஓதி யுணர்ந்து அவை காட்டும் நெறியிலே ஒழுக வேண்டுமென்னும் ஆர்வம் மிக்குடையோராயிருக்கின்றுர்கள். ஆயினும் குடும்பத் தொல்லையினுலே அவைகளை ஓதப் போதியகாலம் கிடைக்கப் பெருதவர்களாயிருக்கின்றுர்கள். அத்தகையோரைப் பொருட்படுத்திப் பொருளுதவியை விரும்பாது ஓதுவிப்பவர் ஏகதேசமாயுள ரென்றுலும், கற்க விரும்புவோர் அவரை யறிந்து அவரி

டஞ் சென்று ஓதியுணாகின்றாரில்லை. ஆதலால இவாகளும் சமய வுணர்சசி யிலலாதவர்களாகவே மாழ்கின்றார்கள்.

இவ்விதமாகப் பொருளுடையோரும பொருளில்லோரும முறையே தங்களிடம் பொருளுண்மையும பொருளின்மையுமே காரணமாக வீணே காலத்தைப் போககுகிறார்கள.

சமயாதீதப் பழமபொருளைக கைவநதிட மனறுள வெளிகாட்டி முத்திதரும் தெய்வ சபையையும காட்டுவதாகிய சமயம சைவசமயமே என்னும் ஆன்றோர்கட்டுரையை அறியாமையினாலும் அறிவிப்பாரினமையாலும் நம்மவரிற் சிலர் தனித்தும வேறு சிலர் குடும்பத்துடனும பிற சமயஙகளில் புகுகின்றார்கள். இன்னும் சிலர் உயர்குலத்தோரென்று வீண்பெருமை பாராட்டித்திரியும் வன்கண்ணரால இழிகுலத்தோரென்று புறககணிககப்பட்டு அவ்விகழ்ச்சியினின்றும் தங்களை ஒருவாறு நீக்கிககொளளும் பொருட்டுத் தஙகள் குல மக்களுடன் பிறசமயப் பிரவேசம் பண்ணுகிறார்கள். இன்னும் சிலர் சிவாலயங்களுககுச செல்லாது முகமதிய மசூதிகளுக்கும கவர்ககுழிகளுககும போய்த தொழுதும் காணிக்கை செலுத்தியும் அங்கே கொடுககப்படுகிற சாம்பலை நெற்றியிலணிநதும வருகின்றார்கள் இனனும் வேறு சிலர் பல பேய்தேவதைகளை ஏற்படுததிக கொண்டு அவற்றிறகு இசககி, மாரி, காட்டேரி, பிடாரி, பேய்ச்சி, வண்டிமலைசசி, மாடன், கருப்பன், குட்டிசசாததான், பெரியசாத்தான் என்னும பல பெயாகளைக கொடுத்து, அவைகளுக்குப் புலாலுண்போருள கீழ்வகுப்பினரைக்கொண்டு ஆடு, மாடு, கோழிகளைப் பலிசெய்விததும, கள் சாராய முதலியவற்றை நிவேதித்தும் இவ்விழி செய்கைகளால் மீளாநரகிற் காளாகின்றாகள். அல்லாமலும் அசசமயஙகளில் அககீழ்மக்கள் மேற்கூறிய மது மாமிசஙகளை மிதமிஞ்சி யுட்கொண்டு நிலைதடுமாறி ஆடிக் குதித்து அருகிலுள்ளோர் திடுக்கிட்டயரும்படி பயங்கரமான கூககுரலுடன் பிதற்றும் அசம்பாவிதச சொற்களைத் தெய்வ வாககாகக கருதி அவ்வன்கண்ணரைத் தங்கள் மனைவிமகக

ருடன் அஞ்சலி வந்தனஞ்செய்து, அவர்களது அனுசாரக் கரங்களால் தீண்டப்பெற்று நெற்றியில் சாம்பரும் தரிக்கப் பெறுகின்றார்கள். நம்மனோரது இத்தகைய இழிய செய்கைகளைப் பார்க்குந்தோறும் நினைக்குந்தோறும் கேட்குந்தோறும் எம் நெஞ்சம் துடித்தயருகின்றது. மேற்கூறிய காரணங்களினால் நமது சமயத்தின் ஆற்றல் நாளுக்கு நாள் குறைந்துகொண்டே வருகிறது.

மேற்கூறிய பெருங் குறைகளையகற்றிச் சமயவுணர்ச்சி தழைத்தோங்குமாறு செய்வது மூதறிஞருக்கு மட்டுமேயன்றிச் சமானியருக்கும் பொதுவான ஒரு கடமையாகும் என்னு முணர்ச்சி சாமானிய அறிவினையுடைய அடியேனது உள்ளத்திற்றோன்றி இருட்டறையிலிருந்த வென்னை ஈர்த்து வெளியே தள்ளியது. இவ்விதம் தள்ளப்பட்ட தமியேன் என்னால் ஒல்லும் வகையால் சைவ சமையப் பணியாகிய மகத்தான அறவினையை ஓவாது செல்லும் வாயிற் செய்வான் உன்னி, இக் காலத்திற்கேற்பச் சைவ சமையக்கொள்கைகளையும் சைவ சமயாசாரங்களையும் சைவப் பெரியாரது திவ்ய சரித்திரங்களையும் எளிய வசன நடையிலெழுதி அச்சிட்டு வெளியிடப் பேரவாவுற்றுளேன். அன்றியும் அரிய பல அற்புதங்களை நிகழ்த்தியதாய் விளங்கும் மேற்கூறிய தமிழ் வேதங்களாம் தேவார திருவாசகங்களும் மற்றுமுள்ள திருவிசைப்பா முதலிய திருவருட்பாக்களும் இக் காலத்துக்கு மிக விரிவாயும் ஆழ்ந்த கருத்துகளை யுடையனவாயும் இருத்தல்பற்றி அவற்றை முற்றிலும் ஓதியுணர்ந்து பயனடைவது பெரும்பான்மையோருக்கு அசாத்தியமாயிருக்கிறது. ஆதலால் அச்செய்யுட்களில் எளிதில் பொருள் விளங்கக் கூடியனவாயும் ஒவ்வொருவரும் அவசியம் ஓதியுணர வேண்டிய பொருள்களை யுடையனவாயும் என்போலிகளது கன்னெஞ்சையும் உருக்க வல்லனவாயுமுள்ள ஆயிரத்தெட்டுத் திருப்பாசுரங்களைத் திரட்டியும் அரும்பத விளக்கத்துடன் அச்சிட்டு வெளியிடுவதாகக் கருதி, கருதியவாற்றினில் திருவருளை முன்னிட்டுத் தொடங்கி, சைவத்

நாட்டுக்கு ஒரு திலகமாய் விளங்கிய திலகவதியாரென்னும் அருந்தவச் செல்வியாரின் தம்பியாராகிய திருநாவுக்கரசு நாயனார் தமிழ் நாட்டுக்கு ஒரு திலகமாய் விளங்கும் திருவாரூரிற் பாடியருளிய தேவாரப் பதிகங்களுக்குத் திலகமெனத் தகும் திருவாரூர்ப்போற்றித் திருத்தாண்டகத்தினை சிவார்ச்சனைத் திருமந்திரமென்னும் பெயருடன் முதன் முறையாக வெளியிட்டுள்ளேன்.

இத்திருப்பாசுரங்களை ஆடவர் பெண்டிர் சிறுவர் சிறுமியர் ஆகிய ஒவ்வொருவரும் நியமமாய் மனனஞ்செய்து அவற்றின் பொருள்களைக் கூடியவரையில் தாமாகவே ஊகித்தறிந்தும் தாமாக அறியமுடியாத விடங்களில் தக்காரவாய்க்கேட்டும் வாய்ப்பாடம் பண்ணிக்கொண்டு பிரதிதினமும் அதிகாலையில் அநுட்டானம் முடிந்தவுடன், பசுவின்சாணத்தினால் மெழுகப்பட்டுக் காய்ந்ததும் நல்ல வெளிச்சமுள்ளதுமான ஓரிடத்தில் வடக்கு முகமாகவேனும் கிழக்கு முகமாகவேனும் சம்மணங்கூட்டி நிமிர்ந்துட்கார்ந்து உச்சஸ்வரத்தில் ஓதக்கடவர்.

இப்பணியைச் செவ்வனே நிகழ்த்தும் ஆற்றல் தமியேனிடத்தின்மையை நோக்கி மூதறிஞர் இகழாமையை வேண்டுகின்றேன்.

அடியார்தம் அடியார்க் கடிமை

திருநெல்வேலி - பரமசிவன்.

சிவமயம

சி வா ர் ச் ச னை த்

திருமந்திரம்

திருச்சிற்றம்பலம்

சிவாய நமவெனச் சிதத மொருக்கி
அவாய மறவே யடிமைய தாககிச
சிவாய சிவசிவ வெனறெனறே சிந்தை
அவாயங கெடநிறக வானநத மாமே —[திருமூலா திருமநதிரம]

திருச்சிற்றம்பலம்

சிவாாசசனைத திருமநதிரம —அதாவது சிவனை அருசசிககும் திருமநதிரம இததிருமநதிரம தமிழ வேதமாகிய தேவாரததுள திருவாரூர்-போற்றித் திருததாணடகததைக குறிககும. இததிருததாண்டகத்தில் சிவபெருமானை நூறறெட்டுமுறை போற்றிப் பாடியுளளது. ஆதலின், இது சிவனை அருசசிததறகாம தகுதி வாயநத திருமநதிரமாயிற்று. மநதிரம எனனும் பதம் (தன்னை) நினைப்பவரைக காப்பது (மந- மநநம, திரம-காப்பது) எனப் பொருள படும. இததிருததாணடகததை வாயினால் உசசச்சுரததிற் பாடி இதில ஆழ்நது கிடககும அரிய பெரிய விடயஙகளின் கருததுகளை மனததினாற் சிநதித்துக கையினால் நாண்மலா கொண்டு அருச்சிப்பவர் கடுநரகில வீழாது

காக்கப்படுவர் என்னும் துணிபுபற்றி இது சிவார்ச்சனைத் திருமந்திரம் எனப்பட்டது. இதற்குப்பிரமாணம்:—

பத்தரோடு பலரும் பொலிய
　　மலரங் கைப்புனல் தூவி
ஒத்தசொல்லி யுலகத் தவர்தாந்
　　தொழுதேத்த வுயர் சென்னி
மத்தம்வைத்த பெருமான் பிரியா
　　துறைகின்ற வலிதாயம் †
சித்தம்வைத்த வடியா ரவர்மே
　　லடையா மற்றிடர் நோயே [சம்பந்தர்]

சிவபூசை செய்வோருள் சிவாஷ்டோத்திர சதநாமங்களைப் பொருளுணர்ந்து பிழையின்றித் திருத்தமாய் உச்சரிக்க இயலாதவர்கள் இதனை ஓதி அருச்சிக்கக் கடவர். ஏனையோர் சிவாலயத்தில் சிவபெருமானுக்கு அருச்சகரைக் கொண்டு அருச்சனை செய்விக்குங் காலத்தில் ஓதக்கடவர்.

இதனைச் சைவசமயாசாரியர் நால்வரில் ஒருவராகிய திருநாவுக்கரசு நாயனார், திருத்தொண்டருடன் திருவாரூர்த் திருப்பதிக்குச் சென்று, அங்குள்ள திருக்கோயிலை அடைந்து, ஆயிரக்கால் மண்டபத்தின் முன்வந்து வணங்கி, திருமாளிகை வாயிலிற்புகுந்து, புற்றிடங் கொண்டாரை நேரில் தரிசித்து, ஆனந்த பரவசராகிக் கண்ணீர் சொரிந்து தியாகேசப் பெருமானது திருவடியில் விழுந்து போற்றிப் பாடியருளினர்.

† திருவலிதாயம் என்னும் தலம் இப்போது 'பாடி' என வழங்கும்.

சிவமயம

திருவாரூர்-போற்றித் திருத்தாண்டகம்

திருவாரூா (திரு ஆர் ஊா) இலககுமி தேவியானவள இருநது தவமபுரிநத (சிவபெருமானைப பூசிதத) தலம. * இததலம தனனிடம் பிறநதார்ககு முததியளிபபது. இவவூரிலுளள ஆலயம திருமூலட்டானம் எனப்படும. அவவாலயததிலுளள ஆயிரககால் மண்டபம தேவாசிரியன் எனபபடும அஙகுளள திருககுளம கமலாலயம் எனபபடும.

இலக்குமிதேவி சிவபெருமானைப் பூசிதத கதை:—

ஆதியில திருமால மூவுலகினையும அழகில வெலலததகக ஒரு புதலவனைப்பெற விரும்பித் திருபபாறகடலில அநநதசயனததினகண் சிவபெருமானை நோககித தவஞ்செயதாா. அவவிதம தவஞ்செய்த அவாமுன் சிவபெருமான் தோனறி அவர் வேண்டிய வரததை ஈநதாா. அபபோது அருகிலிருநத பாாவதி தேவியாா, தமமைதத திருமால வணஙகாததால சினநது, இவரால பெறப்படும பேரழகினையுடைய புதலவன் பினனா அசசிவபெருமானது கோபத்திற்காளாகி அவரது நெற்றிககண்ணினினறும வெளியாகும அககினியினுல் எரிக்கப்பட்டுச சாமபராகக் கடவன" எனச் சபிததார். அதனையறிநத திருமகள மனம வருநதிச சிவபெருமானையும பிராட்டியாரையும வணஙகி, அப்புத்திரன் இறநதாலும் மறுபடியும உயிாபெற்று வாழநதிருகக வரநதர வேண்டுமெனறு பிரார்த்தித்து, அவவரததினைப் பெறறனள.

* திருவாரூரிற பிறகக முததி, திருததில்லையைத தரிசிகக முததி, திருவணணாமலையை நினைகக முத்தி, காசியில இறகக முததி எனபது மூதுரை

பின்னர் பார்வதிதேவியாரது சாபப்படி மன்மதன் இறந்த போது திருமகள் திருவாரூரை அடைந்து புற்றிடங்கொண் டாரைப் பூசித்து இறைவன் திருவருளால் மன்மதனை உயிர் பெற்றெழக்கண்டு மகிழ்ந்தாள் எனபதாம்.

திருச்சிற்றம்பலம்.

க. கற்றவர்க ளுண்ணுங் கனியே போற்றி
கழலடைந்தார் செல்லுங் கதியே போற்றி
அற்றவர்கட் காரமுத மானாய் போற்றி
அல்லலறுத் தடியேனை யாண்டாய் போற்றி
மற்றொருவ ரொப்பில்லா மைந்தா போற்றி
வானவர்கள் போற்று மருந்தே போற்றி
செற்றவர்தம் புரமெரித்த சிவனே போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி

குறிப்புரை —கற்றவர்கள் உண்ணும் கனி - சிவபுரா ணம் சிவனடியார் பிரபாவம் முதலிய புண்ணியக் கதைகளை யும், தேவாராதி தோத்திர நூல்களையும் சிவஞான போதாதி சாத்திர நூல்களையும், இன்னும் திருக்குறள் முதலிய ஞான நூல்களையும் கற்குமுறையிற் கசடறக்கற்று கற்றவாறு ஒழுகுவோர் அநுபவிக்கும் பேரின்பக்கனி. இதனை,

முற்றலாமையிள நாகமொடேன
முளைக்கொம் பவைபூண்டு
வற்றலோடுகல னாப்பலிதேர்ந்தென
துள்ளங்கவர் கள்வன்
கற்றல்கேட்டலுடை யார்பெரியார்கழல்
கையாற் றொழுதேத்தப்
பெற்றமூர்ந்தபிர மாபுரமேவிய
பெம்மா னிவனன்றே [சம்பந்தர்]

மற்றுப்பற்றெனக் கின்றிநின் திருப்
பாதமேமனம் பாவித்தேன்

பெறறலுமபிறந தேனினிபபிற
　　வாததனமைவந தெயதினேன
கற்றவர்தொழு தேததுஞ்சீக்கறை
　　யூரிற்பாண்டிக கொடுமுடி
நறறவாவுனை நானமறககினுஞ
　　சொலலு(ம்)நா நமசசிவாயவே　　[சுநதரர்]

கற்றவாவிழுஙகுங கறபகககனியைக
　　கரையிலாக கருணைமாகடலை
மற்றவரறியா மாணிககமலையை
　　மதிபபவா மனமணிவிளககைச
செறறவாபுரஙகள செற்றவெஞ சிவனைத
　　திருவீழி மிழலைவீறறிருநத
கொறறவனறனனைக கண்டுகண்டுளளங
　　குளிரவென கணகுளிர்நதனவே　　[சேநதனார்]

எனனும திருபபாசுரஙகளால் அறிதல கூடும. கழல - திருவடி. கதி-பதவி. அறறவர் - யான எனது என்னும் அகபபற்று புறப்பறறுகளை ஒழிததவர். ஆர் அமுதம - நிறைநத தேவாமிருதம (சாவா மருநது). அலலல-பிறவித் துனபம. மைநதன் - வலிமையுடைய புருடன். செற்றவர் - பகைவா. புரம-திரிபுரம. * போறறி - துதி.

சேற்றவர் புரமெரித்தது:—

மாயைபெறற புதல்வனுகிய தாரகாசுரன குமாரக்கடவுளாற கொலலபபடட பிறகு, அவவசுரனது புதலவாகளான தாரகாக்ஷன, கமலாக்ஷன், வித்யுன்மாலி என்னும மூவரும் சமபல முடையவாகளும, இநதிரியங்களைச செயித்தவா

* மூமமதில —இருப்புமதில, வெள்ளிமதில, பொனமதில

களும, உலகினைவெல்ல விரும்பினவர்களும. சமதமாதி குண சமபந்திகளும, சததியவானகளுமாய மேருமலையை யடைநது பெரிய தவததைச செய்தாாகள. அப்போது பிரமதேவர் அவாகளது அருநதவததுககிரஙகிப் பிரசன்னமாகி அவா களை நோககி, "நீஙகள யாதுகருதித தவஞசெயகின்றீாகள?" எனறு வினவலும, அவவசுரா மூவரும் அவரைப் பணிநது கைகட்டி நினறு, "கடவுளே! எஙகளுககுச சாவப்பிராணி களிலும ஒனறாலேனும இறவா வரததினை அளிககவேண் டும" எனறு வேண்டினாாகள. அதறகுப் பிரமதேவா, "இறவாதிருப்போா ஒருவருமிலர். கறபகாலங கழியின யானும இநதிராதி தேவாகளும திருமாலும் இறப்போம ஈசன் ஒருவனே இறவாதவன. † ஆதலின, அதனையன்றி வேறு வரம யாதாமொன்றைக் கேளுஙகள" எனன, அசு ரா் ஆலோசிதது, "அண்ணலே! அடியேஙகட்குச சததுருக களால செயிததற்கு அசாததியமானவையும, தேவாகளா லும அழிகக முடியாதவையும, சுகததைக கொடுககததகக வையும, எணணிய இடததிறகு எளிதிறசெலலும் வலிமை யுடையவையுமான பொன, வெளளி, இருமபுகளாலாகிய மூனறு பட்டணஙகள் வேண்டும. அமமுப்புரஙகளும பூமி அநதர சுவர்ககமென்னும திரிலோகஙகளிலும சஞசரிதது ஆயிர வருடததிற்கு ஒருமுறை ஒனறு சோவதும, மீண்டும விருமபிய இடத்திறகுச செலவதுமா யிருத தல் வேண்டும் அவவாறு அமமூனறும ஒனறுகூடி

---

† நூறுகோடி பிரமாகள் நொஙகினா
ஆறுகோடி நாராயண ரஙஙனே
ஏறுகங்கை மணலெண்ணி லிநதிரா
ஈறிலாதவன் ஈசனொருவனே"—திருநாவுககரசு நாயனாா திருக் குறுந்தொகை

யிருக்கும் சமயத்தில் அம்மூன்றையும் ஓரே அம்பினால் அழிக்கவல்ல சுத்தவீரன் ஒருவனிருந்தால் அவனால் மழை காலத்தில் சந்திரன் பூச நட்சத்திரத்துடன் கூடியிருக்கும் முகூர்த்தத்தில் (தைப்பூசத்தன்று) அம்முப்புரங்களும் அழிவை யடையவும், அதனால் நாங்கள் மூவரும் இறக்கவும், வேறொருவராலும் இறவாதிருக்கவும் வரந்தரவேண்டும்'' என்று பிரார்த்தித்தார்கள். பிரமதேவர், "அவ்வண்ணமே யாகுக" என்றுரைத்துத் தமதுலகம் சென்றார். பிறகு மயனென்னும் அசுரத்தச்சன் பிரமதேவர் கட்டளைப்படி காஞ்சனபுரி இரசிதபுரி, ஆயசபுரி என மூன்று பட்டணங்களை நிருமித்து அவற்றுள் * காஞ்சனபுரியைச் சுவர்க்கத்திலும், † இரசிதபுரியை மத்தியத்திலும், ‡ ஆயசபுரியைப் பூமியிலும் சஞ்சரிக்கத் தக்கதாகச் சூத்திரம் வைத்து அவற்றை முறையே தாராகாக்ஷன் முதலிய மூவருக்கும் கொடுத்தான். [தவஞ்செய்தலால் வருவதாகிய வல்லமையை அடைந்தவர்க்கு இயமனைக் கடத்தலும் எளிதென்றால், திரபுராதியர் பெற்ற வரம் அரியதெனப் போற்றத்தக்க தன்று என்பது இங்கு குறிக்கத் தக்கது.

கூற்றங் குதித்தலுங் கைகூடு(ம்) நோற்றலின்
ஆற்றல் தலைப்பட்ட வர்க்கு [திருக்குறள்]

கூற்றங் குதித்தலுக்குச் சான்றாவார் மார்க்கண்டேயர் என்னும் வாலிய தவசியாவார். அவரது சரிதம் பின்னாகக் காண்க.]

தாரகாக்ஷன் முதலாயினார் தாங்கள் பெற்ற அருந்தவச் செல்வத்தினால் இறுமாப்படைந்து தெய்வத்தை மறந்து

---

* காஞ்சனம் - பொன் † இரசிதம் - வெள்ளி ‡ ஆயசம் - இரும்பு. திரிபுரம் - திரிகின்றபுரம் 'திரிகின்ற முப்புரஞ் செற்ற பிரான்' என்றார் திருமூலர்.

நனெறியினின்றும வழுவினவாகளாகி அளவிறந்த அவு ணச சேனையுடன் திரிபுரங்களிற் சென்று வைகுண்ட முத விய தேவ நகரஙகளையும, பூலோகததிலுள்ள பல பட்டினங் களையும் சிதைதது அங்குள்ள அநேக கோடி சிவாசிகளை யும் அழிதது வநதாாகள. தேவர்கள அவவசுரர்களுடைய இத்தகைய கொடிய செயகையைச் சகிகக முடியாதவர்களாய் விட்டுணு மூர்ததியுடன் சிவபெருமானிடஞ் சென்று வணங் கி, பின, "எஙகள பதியே! திரிபுர வாசிகள இறககுந் தனமையுளள எவராலும எப்பிராணியாலும இறவாதிருகக வரமபெறறிருததலின், அவாகளை அழிககும ஆற்றல் தேவரீருககனறி வேறெவாககும இலலையாதலால தேவரீரே அவவவுணப் பதகரைத் திரிபுரஙகளோடழித்து அடியேங் களை இரடசித்தருள வேண்டும" என்று பிரார்ததிததாாகள். பரமகருணாநிதியாகிய சிவபெருமான் அவர்களது வேண்டு கோளுககிரஙகி, "அவ்வாறே செய்வோம்" என விடை யளித தனுபபினா. பின்னா அவருடைய ஆக்கினையினபடி விசுவகர்மா வெனனுந் தேவதசசன் * பதினான்கு உலகஙகளை யும ஒரு திவயாதமாய நிருமிததான். சூரிய சநதிராகள அவ் விரதததின் சககரங்களாயினா. பிரமதேவர் சாரதியானார். வேதங்கள நானகும நானகு குதிரைகளாயின. பிரணவ மநதிரம குதிரை செலுததுங கோலாயிற்று. இவ்வாறு ஆயததஞ் செய்யப்பட்ட தேரின் மேல சிவபெருமான் பார்

---

* பதினான்கு உலகங்களாவன:—பூலோகம், புவலோகம சுவலோகம், சனலோகம, தபோலோகம, மகாலோகம், சத்திய லோகம என மேலுலகேழும, அதலம், விதலம, சுதலம, தராதலம் இரசாதலம், மகாதலம், பாதாளம், எனக் கீழுலகேழுமாம்.

வதி தேவியாருடன் யுதத சநநததராய எறினா. † அப்போது மேருமலை வாசுகி யெனனும பாமபினை நாணாககொண்ட ஓர் அற்புத வில்லாக அவரது இடககரத்தில அமாநதது. விடடுணுவானவர் அககினி தேவரைக கூராகவும வாயுதே வரை ஈர்ககாகவுங கொண்ட ஓா அறபுத அமபாக அவரது வலககரததில் அமாநதார. சிவபெருமான் ஆரோகணித தனும தேரானது திரிபுரததை நோககிச சென்றது. அத தேர செலலுகையில அதனை உலகததைத் தாஙகும கூரம ரூபியான நாராயணன இடபரூபம வகிதது தாங்கினா. ‡ திரிபுரததைச சமீபிததலும சிவபிரான $ விலலை வளைத தனா. அபபோழுது திரிபுரஙகள மூன்றும ஒன்று சேரநது சரறகாலததுச சநதிரபுஷய நகஷததிரமா யிருநதது. சிவ பெருமான தமது கையிலிருநத ஓரமபைப் பிரயோகிககச

---

† குனறவாரசிலை நாணராவரி வாளிகூரெரி காற்றினமுமமதில
வெனறவா றெஙஙனே விடையேறும வேதியனே
தென்றலார்மணி மாடமாளிகை சூளிகைககெதிர நீணட
(பெண்ணைமேல்
அன்றிலவந தணையும ஆமாததூ ரமமானே—

திருஞான சமபநதா தேவாரம்.

கலலானிழற் கீழாயிடா காவாயென வானோா
எலலாமொரு தேராயயன் மறைபூட்டிநின் றுய்ப்ப
வல்லாயெரி காறறீாககரி கோலவாசுகி நாணகல்
விலலாவெயி லெயதானிடம வீழிமமிழ லையே—

திருஞான சமபநதா தேவாரம்.

‡ கடகரியும பரிமாவுந தேருமுகந தேருதே
இடபமுகந தேறியவா றெனககறிய வியமபேடீ
தடமதிலக ளவைமூன றுந தழலெரிதத வநநாளில
இடபமதாயத தாஙகினான திருமாலகாண சாழலோ—திருவாசகம்.

$ வளைநதது விலலு விளைநதது பூசல
உளைநதன முபபுரம உநதீபற
ஒருஙகுடன வெநதவா றுநதீபற—திருவாசகம்

பெணணை - பனை.

சித்தமானார். அப்பொழுது போர்க் கருவிகளாக அமைந்திருந்த ஒவ்வொருவரும் தம்மாலேயே திரிபுரதகனம் நிகழ்வதாக இறுமாப்படைந்தனர். அதனை யுணர்ந்த சிவபெருமான் பாணத்தைப் ‡ பிரயோகியாது புன்னகை செய்தார். அப்போது அவர் வாயினின்றும் வெளிவந்த அக்கினியினால் முப்புரங்கள் எரிந்து சாம்பராயின - என்பதாம்.

குறிப்பு:—ஆலயங்களில் பிரமோற்சவ காலத்தில் நடைபெறும் இரதோற்சவம் (தேரோட்டம்) இந்த ஐதிகத்தினையே குறிக்கும் என்றறிக

உ. வங்கமலி கடனஞ்ச முண்டாய் போற்றி
மதயானை யீருரிவை போர்த்தாய் போற்றி
கொங்கலரு (ம்) நறுங்கொன்றைத் தாராய் போற்றி
கொலப்புலித் தோலாடைக் குழகா போற்றி
அங்கணனே யமரர்கடம் மிறைவா போற்றி
ஆலமர நீழலறஞ் சொன்னாய் போற்றி
செங்கனகத் தனிக்குன்றே சிவனே போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி

குறிப்புரை:—வங்கம் - மரக்கலம், கப்பல். ஈருரிவை - ஈரத்தோடு உரிக்கப்பட்ட தோல். கொங்கு-பூந்தாது. நறுங் கொன்றைத்தார் - வாசனையுடைய கொன்றைப் பூமாலை. குழகன் - அழகன். அங்கணன் - அழகிய கண்ணையுடையவன், (கண்ணோட்டம்) கிருபா நோக்கமுடையவன். அமரர்-மரணமில்லாதவர், தேவர். இறைவன் - அரசன். கனகம் - பொன்.

---

‡ ஈரம்பு கண்டிலம் ஏகம்பர் தம்கையில்
ஓரம்பே முப்புரம் உந்தீபற
ஒன்றும் பெருமிகை உந்தீபற—திருவாசகம்

சிவபெருமான் நஞ்சமுண்டது —முன்னொரு காலத்தில தேவாகளும அசுராகளும தம்முட பகைகொண்டு போா செயய, இருதிறததாருள்ளும் அநேகா இறநதனா. எஞ சியோா நெடுநாள அழியாமலிருநது போாசெயயககருதிப் பிரமதேவரையடைநது தங்களுக்குச சாவாமருந்தாகிய அமிருததகைத் தரவேண்டுமென்று பிராாததித்தாாகள். பிரமதேவா அவர்களுடன திருமாலிடஞ சென்று அவாகளது வேணடுகோளை தெரிவித்தாா.

திருமால அவாகளது விண்ணபபததுககிணஙகி, பாற கடலில மநதரகிரியை மததாக நிறுததி, சநதிரனை தூணு யமைத்து, வாசுகியென்னும பாமபைக கயிறுகப பிணைத்துக கடையுமபடி ஆககினை செயதாா. பின தாம ஆமையுருக் கொணடு மத்தின அடியையும முடியையும முறையே தமது முதுகினலும கரததினலும தாஙகி நினறனா வாசுகியாகிய கயிறறைச சுரர் ஒரு புறமு ா அசுரர் ஒரு புறமுமாகப் பிடித் துககடைநதாாகள அவவாறு கடைநதபோது, வாசுகி வருநத தம பொறுது நஞசைக கககக, அநநஞசு உலக முழுதும பரவி யது. அதனைக கணணுறறு எலலோரும பயந்து வருந தினர். அப்போது திருமால் அவாகளுடன கயிலைககுச சென்று நிகழ்நததைப பரமசிவனிடம விண்ணப்பஞ செய தார். சிவபெருமானுடைய ஆககினைப்படி அவா பக்கததி லிருநத ஆலாலசுநதரா அநநஞசைத திரட்டிக கொண்டு வநதுதவ, எமபிரானா அதனை ஒரு திவலையாககி உட கொண்டு தமது திருமிடறறில நிறுததினர். அதனல அவா காளகண்டர் என்னும் பெயரையடைநதார். பின்பு திரு மால முதலியோா பாற்கடலை மறுபடியும கடைநது அமுதத தைப் பெறறாாகள் என்பதாம்.

சென்று, அங்கு முன்னர் மோகினியாய்ச் சென்ற மாயனாரையும் அவர் தாங்கி நின்ற பெண்ணுருவின் பேரழகைக்கண்டு காமவிகார மடைந்து தங்கள் உன்னதத் தவநிலையினின்றும் தவறி அவரைத் தொடர்ந்த அம்முனிவர்களையும் சந்தித்தார். அப்பொழுது இருடியர் காளையுருக்கொண்டு நின்ற கடவுளரையும் கற்புநிலைதவறி நின்ற தங்கள் பன்னியரையும் கண்டு நாணமடைந்து, நிகழ்ந்ததெல்லாம் சிவபெருமானது திருவிளையாடலென்பதை அறிந்தும் தாங்கள்கொண்ட இறுமாப்பினின்றும் நீங்காதவர்களாய்ச் சிவபெருமானை மிகவும் வெகுண்டு பார்த்து அவரைக்கொல்ல நினைத்து ஒருமிகக் கொடிய யாகத்தைச் செய்தார்கள். அப்போது அவ்வேள்வித் தீயினின்றும் ஒருபுலி தோன்றி அம்முனிவர்களது ஆக்கினைப்படி சிவபெருமானைக் கொல்லும்படி செல்ல, அவர் அப்புலியைக்கொன்று அதன் தோலை ஆடையாகத் தரித்தார். அவ்வேள்வித் தீயினின்றும் முத்தலைச்சூலம், மான், பாம்புகள், பூதங்கள், நகுவெண்டலை, மந்திரரூபமாகிய உடுக்கை, முயலகனென்னும் பூதம் ஆகிய இவைகள் தோன்றின. சிவபெருமான் சூலத்தை ஆயுதமாக ஒருகையிற்பற்றி மானை மற்றொரு கையிலேந்தி, அரவங்களை ஆபரணமாக அணிந்து, பூதங்களைத் தமது சேனையாக்கிக் கொண்டார்; வெண்டலையைச் சிரத்திலணிந்து, உடுக்கையை வேறொரு கையிற்பற்றினார் கடைசியாக முனிவர்கள் வேள்வித் தீயை ஏவினர். சிவபெருமான் வேள்வித்தீயைப் பிறிதோர் கையிலேந்தி, முயலகனை உதைத்துக் கீழே தள்ளித் தமது வலது காலை அவனது முதுகிலூன்றி நின்றனர். அவ்வாறு காலின் கீழ் அகப்பட்ட முயலகன் மெல்ல மெல்ல உடலைத் தூக்கித் தூக்கி யசைதலும், எம்பெருமான் மழு முதலியவைகளைக் கைகளிலேந்தி அரவங்களை ஆபரணமாயணிந்து நின்ற திருக்

கோலததுடன சிதாகாசததின கண்ணே என்றும நீஙகாமல ஆனநதநிருததம செயவதுபோல அமமுயலகன் முதுகொடிய நடிததருளினா. அவா அவவாறு தாண்டவஞ செய்தலும சராசரஙகள யாவும நடுஙக உலகடஙகலும மயஙகி விழ்நது அயாவுறறது. இறைவா அதனை யுணாநது திருநடமியற் றுது நிற்க, தேவா முதலியோா மயககததினினறும நீஙகி அனபோடெழுநது வணஙகினா பினனா இறைவா அம் முனிவர்களுககும அவா பன்னிபாககும நலலுணாசசியைத் தர, அவாகளும எழுநது சிவபெருமானை வணஙகித தாஙகள செயத பெருங குறறங்களைப் பொறுததருளுமாறு துதிதத னா தருககு மிகுததுத தன தோள்வலியுனனித தட வரை (கயிலைமலை)யை வரைககைகளால எடுதது ஆாத்த அரககனை (இராவணனை) அமமால் வரைககீழ் அடாததிட்டு அருள செய்த கருணையங கடலாகிய எமபெருமான அவர் களுககு அருள செயதாா. எனபதாம.

குறிப்பு:—ஆலயஙகளில் பிரமோறசவ காலததில நடை பெறும கஙகாள நாதா (பிசசாண்டாா) உறசவம இநத ஐதி கததினையே குறிககும எனறறிக

சிவபெருமான் ஆலமர நிழலில் அறஞ் சோன்னது:—

பாாவதி தேவியாா மலையரையன் மகளாய அவதரித துப் பரமசிவனை மணஞ் செய்வதற்காகத தவஞசெய்த காலத தில, ஒருநாள பிரமதேவர் தமது மானத புத்திரர்களாகிய சனகா, சனநதனா, சனாதனா, சனறகுமாரா என்னும நாலவரையும அழைததுத தமது படைப்புத தொழிலை ஏறறுக கொளளுமபடி சொனனாா. அவர்கள அதற்கு இணஙகாமல், "நாஙகள இநதப் பாசபந்தததில அகப்பட் டுழலாது சிவபெருமானது திருவடியை அடைநது பேரினபக்

கடலில் திளைத்தாடுவோம்" என்று சொல்லித் தவஞ்செய்வா ராயினர். பரமசிவன் அவர்களது தவத்துக்கிரங்கி அவர் களுக்குத் தரிசனந் தந்து, 'உங்களுக்கு வேண்டியது யாதென்று' கேட்க, அவர்கள் தங்களுக்கு வேதாகம முடிப் பொருளை உணர்த்த வேண்டிக்கொண்டார்கள். இறைவர் அவர்களுடன் கயிலைமலைச் சிகரத்தின் தென்றிசையில் இருக் கின்ற கல்லாலமரநிழலில் தட்சணாமூர்த்தியாய் எழுந்தருளி அவர்களுக்கு வேதார்த்தங்களை ஓங்கார வாயிலாக உப தேசித்தருளி, பின்னர் சிவாகமத்திற்கூறும் சரியை, கிரியை, யோகம், ஞானமென்னும் சிவபூசையாதி நான்கு பாத இயல்புகளையும், பதி, பசு, பாசமென்னும் திரிபதார்த்த இலக்கணங்களையும் தெளிவித்தருளினார். கேட்டவர்களாகிய அவர்கள் தாங்கள் தெரிந்துகொண்ட உண்மைப் பொருள் களை அறம், பொருள், இன்பம், வீடென நான்கு பாகு பாட்டில் நான் மறையாக இயற்றினார்கள் என்பதாம்.

குறிப்பு:—மேற்கூறிய நான்கு பாதங்களில் ஞானநிலை யானது சொல்லால் உணர்த்தற்கு உரிய தன்றாதலை நோக்கி மோனமென்பது ஞானவரம்பாகுமாதலால் மோனநிலையே உண்மை நிலையென்று சிவபெருமான் தாமும் மோனநிலையி லிருந்து சனகாதியர்க்கு ஞானநிலையை உணர்த்தியருளி னார் என்றறிக.

௩. மலையான் மடந்தை மணாளா போற்றி
மழுவிடையாய் நின்பாதம் போற்றி போற்றி
நிலையாக என்னெஞ்சி னின்றாய் போற்றி
நெற்றிமே லொற்றைக்கண் ணுடையாய் போற்றி
இலையார்ந்த மூவிலைவே லேந்தீ போற்றி
ஏழ்கடலு மேழ்பொழிலு மானாய் போற்றி
சிலையாலன் றெயிலெரித்த சிவனே போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி

குறிப்புரை.—மலையான - இமயமலை யரசன. மடநதை-பெண்களுககுரிய பருவஙகள ஏழிலொனறு; அவை பேதை, பெதுமபை, மஙகை, மடநதை, அரிவை, தெரிவை, பேரிளமபெண். இவாககு முறையே வயதெல்லை - அ, கக, கரு, கஅ, உரு, ருக, சக என்றறிக மணாளன - மணவாளன, நாயகன். மழவு-இளமை. விடை-இடபம, எருது. மூவிலை வேல-முத்தலைசசூலம, கடல ஏழு-உவர்நீா, நன்னீர், பால, தயிா, நெய், கருபபஞசாறு, தேன். பொழில-உலகபொது. சிலை-மேருமலை, எயில-மதில. சிலையால எயிலெரிதத சிவன்-செறறவர்தம புரமெரிதத சிவன் (முதல திருப்பாசுரம)

சிவபெருமான் மலையான் மடந்தை மணாளனது:—பூர்வத்தில பிரமதேவாது புததிரனை தககன் அருநதவமியறறி, அததவததின் பயனாக உமாதேவியாரைப் புத்திரியாராக அடையப்பெறறு அப்புததிரியாரைச சிவபெருமானுககு வதுவைசெய்து கொடுத்தான். தககன் இவவாறு சிவபெருமானைத தன் மருகனாகப்பெறறு அதனால் தருக்குறறு அச்சிவபெருமானையே மதியாது இகழ்நது அதனால அவாது கோபத்துககாளாகி முன அவாநுககிரகததால் தான்பெறற பெருமபேறுகளனைததையும் ஒருஙகிழநது வலியுஙகுன்றி வறியனாயினன. தககனது நிலைமை இதுவாக, அவனிடம் சிலகாலம் வளர்நது தாக்ஷாயணி யென்னும் பெயரைப் பெற்றிருநத உமாதேவியார் சிவபெருமானை வணஙகி, தக்கனால் வளர்க்கப்பட்ட தன் சரீரத்தையும் அவனால தனக்கிடப்பட்ட பெயரையும நீக்கியருள வேண்டுமென்று பிரார்ததிதது, அவாநுக்கிரகத்தால் இமயமலை யரையனிடததே ஒரு குழநதை வடிவாய்சசென்று வளர்ந்து ஐநது வயதாயபின் இறைவரை நோக்கித் தவஞசெய்து அவரால் மணஞ்செய்து கொள்ளப்படடாா என்பதாம.

மழவிடையின் வரலாறு:- முன் ஒரு சர்வசங்கார காலத்தில் பிரமவிட்டுணுக்களும் சகல உயிர்களும் இறப்ப, அண்டங்கள் அழிந்துபட, எல்லா உலகங்களையும் அக்கினி வியாபித்துண்ண, அப்பொழுது உலகமெல்லாம் சுடலையாய்ப் பரிசுத்த முடையதாய்த் தோன்ற, அந்த மகா மயானத்திலே சர்வேசுவரன் பராசத்தி கண்டுகளிக்க நடித்தார். அப்போது தருமதேவதை ஓரழகிய வெள்ளையிடப உருவெடுத்து அவர்முன் சென்று வணங்கி, "என்னை உமது வாகனமாக்கிக் காக்கவேண்டும்" என்று வேண்டியது. அவர் அதற்கு இறவாத தன்மையையும், ஒப்பில்லாத வலிமையையும், அன்பையும், மெய்யுணர்வையும் கொடுத்து, அதனை நோக்கி, "கிருதயுக முதலிய நான்கு யுகங்களிலும் தருமத்தின் தன்மை இதுவென்று யாவரும் அறியும்படி முறையே நான்கும் மூன்றும் இரண்டும் ஒன்றுமாகிய கால்களைப் பூமியில் ஊன்றிச் சஞ்சரிப்பாயாக. உன்னிடத்தில் யாம் எக்காலமும் நீங்காதிருப்போம்" என்று அருளிச்செய்து, அதனை வாகனமாகக் கொண்டார். அந்த நாள் முதலாக எம்பெருமான் தமதடியார்க்கு எருதேறி அருள்புரிவாராயினர். இந்த உண்மையினை,

"எங்கேனு மியாதாகிப் பிறந்திடினுந் தன்னடியார்க்
கிங்கேயென் றருள்புரியு மெம்பெருமா னெருதேறிக்
கொங்கேயு மலர்ச்சோலைக் குளிர்பிரம புரத்துறையுஞ்
சங்கேயொத் தொளிர்மேனிச் சங்கரன்றன் றன்மைகளே."

என்னும் திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார் திருவாக்கிற் காண்க. சிவபெருமான் திரிபுரத்தைச் சிரித்தெரித்த சமயத்தில் அருகில் நின்ற விட்டுணுவானவர் அவரை இடபவுருவெடுத்துத் தாங்கினர் என்பதும் ஓர் ஐதிகமாம். இதற்குப் பிரமாணம் முன்னாகக் கூறியுள்ளது.

மூவிலை வேலின் வரலாறு:—புலித்தோலாடை புனைந்த கதையிற் காண்க. இவ்வேலின் அடித்தண்டு சிவபெருமானையும், மேற்கவர்கள் மூன்றும் படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் முத்தொழிற் கர்த்தாக்களாகிய பிரம விட்டுணுருத்திரர்களையும் குறிக்கும் ஒரு சின்னமாகும்.

௪. பொன்னியலு மேனியனே போற்றி போற்றி
பூதப்ப டையுடையாய் போற்றி போற்றி
மன்னியசீர் மறைநான்கு மானாய் போற்றி
மறியேந்து கையானே போற்றி போற்றி
உன்னுமவர்க் குண்மையனே போற்றி போற்றி
உலகுக்கொ ருவனே போற்றி போற்றி
சென்னிமிசை வெண்பிறையாய் போற்றி போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி (௪)

குறிப்புரை:—பொன் இயலும் மேனி - பொன்னிறமுடைய உடம்பு, 'பொன்னார் மேனியனே' 'பொன் வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ணம் மேனி பொலிந்திலங்கும்' என்றார் பிறரும். பூதம் - பூதகணம், பேய் படை-சேனை. மன்னியசீர் மறைநான்கு - நிலைபெற்ற (அழியாத) சிறப்பினையுடைய இருக்கு, தைத்திரியம் (யசுர்), சாமம், அதர்வணம் என்னும் மறைபொருளாகிய நான்கு வேதங்கள். 'மன்னிய சீர் மறைநாவன் நின்றவூர்ப் பூசல்' என்றார் சுந்தரமூர்த்தி நாயனார். 'மறை நான்குமானாய்' என்றதனால் சிவபெருமானது தற்புருடம் (காத்தல்), அகோரம் (அழித்தல்), வாமம் (விளக்கல்), சத்தியோசாதம் (தோற்றுவித்தல்) என்னும் நான்கு திருமுகங்களினின்றும் முறையே இருக்காதி நான்கு வேதங்களும் பிறந்தமை பெறப்படும். மறி-மான் கன்று. உன்னுதல் - நினைத்தல். உன்னுமவர்க்கு உண்மையன் - நெக்கு நெக்கு நினைபவர் நெஞ்சுளே புக்கு நிற்கும் பொன்

ஞாசபைப் புணணியன். சென்னி - தலை. பிறை - சந்திரப் பிரபை, வாலசந்திரன்.

பூதப்படையின் வரலாறும் மறியின் வரலாறும் - புலித் தோலாடை புனைந்த கதையிற் காண்க.

பிறையணிந்தது :—சந்திரனுடைய பனனியா இருபத தெழுவரில் கார்ததிகை உரோகிணியென்னும இருவரும பேரழகுடையவரா யிருநதமையால், அவன் அவர்களிடததே அதிக மையலகொண்டு மற்றையரிடம பராமுகமாயிருந தான. ஏனைய மிருகசிரிட முதலிய இருபததைவரும தங களுககு நோநத குறையைத் தங்கள பிதாவாகிய தககனிடம சொலலி முறையிடவும, அவன "சநதிரனுடைய கலைகள தினமொனறுகக குறைந்து ஒளி மழுஙகுக" என்று சபித தான. அசசாபததினால சநதிரனது கலைகள் பதினுறிற் பதி னைநது தேய, எஞசிய ஒருகலையும தேயுமுன் சநதிரன் சிவ பெருமானிடம சென்று வணங்கித தனககு நேர்நத குறை யை விண்ணப்பஞசெயதான். உடனே அஞ்சியடைநதவர்க்கு அபயமளிககும் கருணைவள்ளலாகிய சிவபெருமான் திருவுள மிரஙகி, அவனது ஒற்றைக கலையினைத தமது திருமுடி யிறபுனைநது, அவ்வாறு புனையப்பெற்றகலை நாளுககு நாள வளர்நது பதினாறு கலைபளவு நிறைநதும பின்னாக குறைந துமபின்னிறைநதும மாறிமாறி விளஙகும்படி அநுககிரக களு செய்தனர் என்பதாம.

ரு நஞ்சுடைய கண்டனே போறறி போற்றி
நறறவனே நின்பாதம் போற்றி போறறி
வெஞசுடரோன் பல்லிறுத்த வேநதே போறறி
வெண்மதியங் கண்ணி விகிர்தா போற்றி

துஞ்சிருளி லாட லுகந்தாய் போற்றி
தூநீறு மெய்யகத்தணிந்த சோதீ போற்றி
செஞ்சடையாய் நின்பாதம் போற்றி போற்றி
திருமூலட் டானனே போற்றி (ரு)

குறிப்புரை.—கண்டம் - கழுத்து, நலத்தவன்-புருடோத்தமன், 'நற்றவா வுனை நான் மறக்கினும் சொல்லு(ம்) நா நமச்சிவாயவே' - சுந்தரர் திருவாக்கு வெஞ்சுடரோன்-சூரியன். இறுத்தல் - ஒடித்தல் மதி - சந்திரன். கண்ணி-தலைக்கொண்டையில் அணியும் பூமாலை. துஞ்சு இருள் - சீவராசிகளனைத்தும் தூங்கும் நள்ளிருள். ஆடல் - நடித்தல். உகத்தல் - விரும்பல். துஞ்சிருளில் ஆடல் - மகா பிரளய காலத்தில் பிரம விட்டுணு சந்திர சூரியாதி தேவர்கள் எல்லோரும் இறந்துபட, உலகங்களனைத்தும் நீரில் மூழ்கியழிய, அப்போது எங்கும் பரவி நிறைக்கும் பேரிருட்டில் சிவபெருமான இறந்துபட்ட பிரம விட்டுணுக்களது எலும்புகளாற் கோக்கப்பட்ட மாலைகளை மார்பிலணிந்துகொண்டு பிரமனது மண்டையோட்டினைத் தோண்மேலேந்தி பராசத்தி களிக்க வீணை வாசித்துக்கொண்டு நடம்புரிதல். இதற்குப் பிரமாணம்:—

'பெருங்கடல் மூடிப் பிரளயங் கொண்டு பிரமனும்போய்
இருங்கடன் மூடி யிறக்கு மிறந்தான் களேபரமும்
கருங்கடல் வண்ணன் களேபர முங்கொண்டு கங்காளராய்
வருங்கடன் மீள நின்றெம்மிறை நல்வீணைவாசிக்குமே' **அப்பர்**

'நங்காய் இதென்னதவ(ம்) நரம்போ டெலும்பணிந்து
கங்காளந் தோண்மேலே காதலித்தான் காணேடீ
கங்காளம் ஆமா(று)கேள் காலாந்தரத் திருவர்
தங்காலஞ் செய்யத் தரித்தனன்காண் சாழலோ' - **திருவாசகம்**

[இருவா என்றது பிரம விட்டுணுக்களை என்றறிக கங்காளம் - பிரமகபாலம், பிரமனது மண்டையோடு.]
தூ நீறு - பரிசுத்தமான திருநீறு, விபூதி.

வெஞ்சுடரோன் பல்லிறுத்தது —தக்கப்பிரசாபதி சிவபெருமானை விலக்கித் தேவர்களோடு யாகஞ்செய்த காலத்தில் வீரபத்திரக் கடவுள் பத்திரகாளியுடன் யாகசாலையுட்சென்று, 'எம்பெருமானுக்குரிய அவியை ஈகுதி' என்றார். தக்கன் மறுத்தான். உடனே வீரபத்திரக்கடவுள் மிகவுங் கோபங்கொண்டு அவியுண்ணும் ஆவலுடன் அவனருகில் வீற்றிருந்த விட்டுணுவின் மார்பில் தண்டாயுதத்தினால் அடித்து, பிரமாவின் சிரசிறக்குட்டிக் கீழே தள்ளி, சந்திரனைக் காலால் உதைத்துத் தள்ளி, **சூரியனைக் கதுப்பிலடித்துப் பற்களை உதிர்த்து,** குயிலுருக்கொண்டு ஆகாயத்திற் சென்ற இந்திரனது தோளை வாளினால் வெட்டி அக்கினியின் ஏழு நாக்குகளையும் அறுத்து, நிருதியைத் தண்டினாலடித்து, வருணனை எழுப்படையினாலடித்து, வாயுவை மழுப்படையினால் அடித்து, தக்கனைத் தண்டித்து, யாகத்தையுஞ் சிதைத்தார் என்பதாம்.

௬ சங்கரனே நின்பாதம் போற்றி போற்றி
சதாசிவனே நின்பாதம் போற்றி போற்றி
பொங்கரவா நின்பாதம் போற்றி போற்றி
புண்ணியனே நின்பாதம் போற்றி போற்றி
அங்கமலத் தயனோடு மாலுங் காணா
அனலுருவா நின்பாதம் போற்றி போற்றி
செங்கமலத் திருப்பாதம் போற்றி போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி (௬)

குறிப்புரை — சங்கரன் - கிருத்தியம் (பிரபஞ்சத் தொழில்) ஐந்தினுள் ஒன்றாகிய சங்காரத்தைச் செய்பவன், கிருத்தியங்கள் - சிருட்டி (படைத்தல்), திதி (காத்தல்) சங்காரம் (அழித்தல்), திரோபவம் (மறைத்தல்), அனுக்கிரகம் (கிருபை) என்பன. இக் கிருத்தியங்களுக்குக் கருத்தாக்கள் முறையே பிரமா, விட்டுணு, உருத்திரன், மகேசுரன், சதாசிவன் என்பவர். அவ் வைவரில் ஒவ்வொருவரும் ஆதியும் அந்தமுமில்லாத அரும் பெருஞ் சோதியாகிய சிவபெருமானுடைய திவ்விய மூர்த்தங்க (உடம்புக)ளாவர் என்றும், அம் மூர்த்தங்களில் உருத்திர மூர்த்தம் சடை, மான், மழு முதலிய சிவசின்னங்களைத் தாங்கி நெற்றிக்கண்ணுடைத்தாய் விடையேறிச் சிவனையொத்து விளங்காநிற்கும் என்றுமறிக. பொங்கு அரவம் - கொதித்து (சீறி) எழும் பாம்பு. அம் கமலத்து அயன் - அழகிய தாமரை மலரில் வீற்றிருக்கும் பிரமன். மால் - விட்டுணு. அனல் - தீ.

அரவம் பூண்ட கதை—புலித்தோலாடை புனைந்த கதையிற் காண்க.

அயனும் மாலுங்காணு அனலுருவாயது—முன்னொரு காலத்தில் பிரமனும் விட்டுணுவும் நான் பிரமம் நான் பிரமம் என்று போரிட்டனர். அப்போது சிவபெருமான் அவர்களது இறுமாப்பை யடக்கி அவர்களுக்கு நல்லுணர்வை யருளத் திருவுளங்கொண்டு அவர்களுக்கிடையே ஓர் அக்கினிமலையாய்த் தோன்றினார். அவ்வனலுருவைக்கண்டு அவர்களிருவரும் அஞ்சித் தியங்கி நின்றனர். அப்போது சிவபெருமான் அவர்களை நோக்கி, 'இம்மலையினது அடிமுடிகளிலொன்றை எவர் முன்னதாகக் காண வல்லரோ அவரே பரமாவார்' என்றுரைக்க, பிரமன், 'நான்

முடியைக் காண்பேன்' என்று அன்னமாய்ப் பறந்து சென்றும், விட்டுணு, 'நான் அடியைக் காண்பேன்' என்று பன்றியாய்த் தரையைக் கீண்டு கீழ்ச்சென்றும், பலநாள் முயன்றினைத்துக் காணமுடியாதவராய் இறுமாப்பொழிந்து, சிவபெருமானே பரமனென் றுணர்ந்தார்கள் - என்பதாம். இதனை,

"பங்கயன் முகுந்தனும் பரமென றுன்னியே
தங்களி லிருவருஞ் சமர்செய் துற்றுழி
அங்கவா வெருவுற வங்கி யாயெழு
புங்கவன் மலரடி போற்றி செய்குவாம்"

"பன்றியர் பரவையா பரிசுடை வடிவொடு படர்தர
அன்றிய வவரவ ரடியொடு முடியவை யறிகிலர்
நின்றிரு புடைபட நெடுவெரி நடுவெயொர் நிகழ்தரச்
சென்றுயா வெளிபட வருளிய வவர்நகர் சேறையே"

எனனும் கந்தபுராணச் செய்யுளாலும், திருஞான சம்பந்த சுவாமிகள் தேவாரப் பாசுரத்தாலும் அறிதல் கூடும்.

எ. வம்புலவு கொன்றைச் சடையாய் போற்றி
வான்பிறையும் வாளரவும் வைத்தாய் போற்றி
கொம்பனைய நுண்ணிடையாள் கூறு போற்றி
குரைகழலாற் கூற்றுதைத்த கோவே போற்றி
நம்புமவாக் கரும்பொருளே போற்றி போற்றி
நால்வேத மாறங்க மானாய் போற்றி
செம்பொனே மரகதமே மணியே போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி

குறிப்புரை:—வம்பு - வாசனை. வான்பிறை - ஆகாயத்திற் சஞ்சரிக்கும் சந்திரன். வாள் அரவு - ஒளியையுடைய சர்ப்பம் கொம்பு அனைய நுண் இடையாள் கூறன் - பூங்

கொம்பை யொத்துத்துவளும் மெல்லியசிற்றிடையினையுடைய உமா தேவியாரைப் பங்கிலுடையவன். குரைகழல - சப்திக்கின்ற வீரககழல், கழல என்னும்பதம இங்கு ஆகுபெயராய்க் கழலையணிநத காலைககுறிததது நின்றது. கோ - அரசன். வேதம் நான்கு-இருககாதி நான்கு. வேதாஙகம ஆறு - மந்திரம், வியாகரணம, நிகண்டு, சநதோபிசிதம், நிருததம, சோதிடம. மரகதம் - பசசைமணி; இது நவமணிகளிலொன்று. நவமணிகளாவன:—கோமேதகம், நீலம, பவளம, புட்பராகம, மாணிககம, மரகதம, முத்து, வைடூரியம, வைரம. மணி - முததது.

கோம்பனைய நுண்ணிடையாள் கூறனையது:—முன்னொரு கற்பததில பிரமதேவர் பலவுயிர்களையும படைககக் கருதி, முதலில சனகர் முதலாய நாலவரைப் படைக்க, அவர்கள ஞானததையடைநது நல்ல தவத்தர்களாயினார்கள அதன் பின் பிரமதேவரது சிருட்டித தொழில் நடைபெறாதாக, அதனால் அவா மனம வருநதித தமது புததிரருடன மகா விட்டுணுவிடம் சென்று தமககுச சமபவித்த குறையைக் கூறி முறையிடவும், திருமாலானவர் பிரம தேவரையும அவர் புததிரரையும அழைத்துக்கொண்டு திருககைலாச மலையை அடைநது சிவபெருமானிடம் விண்ணப்பஞ் செய்தாா. எம்பெருமான் விட்டுணுவையும் பிரமாவையும் சனகாதி நால்வரையும திருநோககஞ் செய்து துகளாக வழிததுத் தனித்திருநது தமது இடது புயததை நோக்க, அதினின்றும் உமாதேவியாா தோன்றினா. அவரை அவண் இருததி அவருடன் அருளொக்கததுடன் கலநது வீற்றிருநது விட்டுணுவையும் பிரமாவையும சனகாதி நாலவரையும உண்டாக்கி, விட்டுணுவை நோககி, "நாம நமது அருட்சததியாகிய உமையுடன் சேர்நதோம. இனிப் பிரமனது சிருட்டித்தொழில் சரி

வர நடைபெறும்" எனறூா விட்டுணு முதலிய அறுவரும சிவபெருமானையும உமாதேவியாரையும வணஙகி விடைபெற்றுககொண்டு தஙகளிருப்பிடம சென்றனா என்பதாம. இதனால சிவபெருமான பங்கில வீற்றிருககும பெண்ணுருவம அவரது அருட்சததியேயா மெனபதும அப்பெண்ணுடன அவா கலநது வீற்றிருபபதால ஆண்பெண்ணுகிய இருபால களும அன்புடன் கலநது விருததியடைநது அதனால் பிரமாவினுடைய படைபபுத தொழில சரியாய் நடைபெறுமென்பதும் பெறப்படும இதனை,

"தென்பா லுகநதாடுந தில்லைசசிற் றமபலவன்
பெணபா லுகநதான் பெருமபித்தன் காணேடீ
பெணபா லுகநதிலனேற பேதா யிருநிலத்தோா
விண்பா லியோகெய்தி வீடுவர்காண் சாழலோ."

எனனும் மணிவாசகப் பெருநதகையின் அருளவாககாலும் அறிதல் கூடும.

கூற்றுதைத்தது.—முற்காலததில கடகமென்னும ஒருரிலே குசசகரெனனும பிராமணத தவசிரேட்டர் ஒருவர் இருநதாா. அவரது புத்திரராகிய கௌசிகரெனபவர் பிறவிககடலைக் கடகக வெண்ணி அரிய தவஞ்செய்யுங் காலையில அவரை ஓா ஆததீண்டு குற்றி என்றெண்ணி மான முதலிய மிருகஙகள் அவர் மேல் உராய்ந்துசெல்ல, அதனைச சிறிதும அறியாதவராயச சிததத்தைச சிவன்பால் வைததது, அதனால் மிருககண்டேய ரென்னும காரணப்பெயரைப் பெற்றிருநதார். அன்னூா பின்னர் ஒரு மகவைக குறித்துத தவஞ்செயது இறைவனருளால் மிருகண்டு என்னுமோர் புததிரரைப் பெற்றூா. அமமிருகண்டு முனிவர் மருத்துவதியென்னும உததமியை மணந்து காசியையடைநது தவஞ்செய்தாா. அப்போது சிவபெருமான் அவருககுப் பிர

சனனமாகி, 'நீ விரும்பியது யாது? என்று வினவுதலும், மிருகண்டு முனிவர் எம்பெருமானைப் பணிந்து, "சுவாமி! அடியேனுக்குப் புத்திரப்பேறு வேண்டும்" எனப் பிரார்த்தார். சிவபெருமான் முனிவரை நோக்கி, "அறிவிலாதவனாய், தீக்குணமுடையவனாய், ஊமையும் செவிடும் முடமும் குருடுமாய், ஆயுட்காலமெல்லாம் நோயினால் வருந்துபவனாய நூறு வயசுக்குச் சீவித்திருக்கும் ஒரு புதல்வன் வேண்டுமோ, அல்லது நல்லறிவும், நற்குணமும், மெய்யுணர்ச்சியும், ஈசுரபக்தியும், நோயற்ற சரீரமும், பேரழகுமவாய்ந்து கலைபயின்று பதினாறு வயசுக்குச் சீவித்திருக்கும் ஒரு புதல்வன் வேண்டுமோ" என்று வினவ, முனிவர், "அற்பாயுளை உடையவனாயிருந்தாலும் தேவரீரிடத்து அன்புடையவனாய் இருக்கக்கூடிய ஒரு புதல்வனே வேண்டும்" என்று வேண்டி, வேண்டியவாறே ஒரு புதல்வரைப்பெற்று அவருக்கு மார்க்கண்டேயரென்று பெயரிட்டு வளர்த்தார். மார்க்கண்டேயர் பதினாறு வயதை அடைந்த காலத்தில் அவரது பெற்றோர் அவருக்குச் சிவபெருமான் அருளிய ஆயுளின் எல்லை நெருங்கியதை நினைந்து மனம் நோவதைக் கண்ணுற்று அவர்களது மனவருத்தத்தின் காரணத்தைத் தெரிந்து, அவ்வருத்தத்தைத் தீர்ப்பது தமது தலையாய கடனெனத் தலையுணர்ந்து, அவர்களை நோக்கி, "நான் சிவபெருமானைப் பூசைசெய்து இயமனுடைய வலியைக் கடந்து உங்களிடம் வருவேன்!" என்றுரைத்து அவர்களைத் தேற்றி, பிறகு சிவபெருமானைப் பூசித்துத் துதித்து அருந்தவஞ் செய்தார். அப்போது பத்திவலையிற் படுபவராகிய சிவபெருமான் மார்க்கண்டேயர் பூசித்த சிவலிங்கத்தினின்றும் வெளிப்பட்டு, 'நீ விரும்பியது யாது?' என்று வினவ, மார்க்கண்டேயர், 'சிறியேன் இயமன் கைப்படாது உய்யும்பொருட்டு நீர் எதிர்வந்து அரு

ஊல வேணடும' எனறு பிராாததிததாா பிராாததிததலும சிவபெருமான் மாாககண்டேயரை நோககி, "இயமனுக்கு அஞசாதே' என்று சொலலித தமது திருவடிகளிபண் டையும அவரது சிரசில வைததுச சிவலிஙகததில மறைந் தாா. பின்பு மாாககண்டேயர் இயமபயமினறிச சிவ பூசை செய்துவநதாா. அவவாறு செய்து வநதபோது தமககு அளவிடப்படட கால வெலலே செலலவும, இயம தூதாகள அவரிடம வநது அவர் சிவபூசை செய்தலைக் கண்டு அவரிடததுச செல்வதறகு அஞசி மீணடனா. பிறகு இயமன வநது அவர்மீது தனது பாசததை வீசி இழுததான. அவா அதறகு ஒரு சிறிதும அஞ்சாதவராய் எமபெருமானைத துதிததுககொண்டு அவருடைய நிததியா னநத வடிவாகிய திருவடிநீழலைப பிரியாதுநினறாா. உடனே அடியாரது அல்லலை அறுத்து அருளபுரியும் அன்புருவாய அரனுர் அநதணசசிறுவா அடைககலம்புகுந்த அவ்விலிங் கததினின்றும ஆர்தமெழுநது அநதகனைச சினநது தமது இடப்பாததிலைலே அவனை உதைததாா. உதைத் தலும இயமன் வீழ்நதிறநதான் பினனர் எமபெருமான் மாாக்கண்டேயருககு முடிவிலலாத ஆயுளைத் தநது முன் போலவே சிவலிஙகததில மறைநதருளினர். பினபு பூமி தேவியின் வேணடுதலால் இயமன் மீண்டும உயிர்பெறருன் என்பதாம்.

இவவுண்மையினை:—

அநத ணாளனுன் அடைககலம புகுத
அவனைக காப்பது காரண மாக
வநத காலன்ற னுருயி ரதனை
வவ்விஞயக குன்றன் வண்மைகண் டடியேன

எநதை நீயெனை நமன்றமா நலியில
இவன்மற றெனனடி யானென விலககும
சிநதையால வநதுன றிருவடி யடைநதேன்
செழும் பொழிறறிருப் புன்கூரு ளானே

காலனை மாமலா கொண்டடி பரவிக
கைதொழு *மாணியைக் †கறுததவெங காலன்
ஓலம திடமுன் னுயிரொடு மாள
உதைத்தவ னுமையவள விருபபனெம பெருமான்
மாலைவந தணுக ‡ வோதமவந துலவி
மறிதிரை சங்கொடு பவளமு னுநதி
$ வேலைவந தணையுஞ் சோலைகள சூழ்நத
¶ வெஙகுரு மேவியுள வீறறிருந தாரே"

என்னும் சுநதரமூாத்திநாயனா மதுரவாக்காலும திருஞான சமபநதமூர்த்தி நாயனுர் திருவாககாலும அறிதல் கூடும.

அ உள்ளமா யுள்ளததே நின்ருய போறறி
உகப்பாா மனததெனறு (ம) நீங்காய போறறி
வள்ளலே போற்றி மணாளா போறறி
வானவர்கோன றேடணித்த மைநதா போறறி
வெள்ளையே றேறும விகிர்தா போற்றி
மேலோர்கது மேலோர்கது மேலாய் போறறி
தெள்ளுநீாக் கஙகைச சடையாய போற்றி
திருமூலட டானனே போறறி போற்றி

குறிப்புரை.—உகததல-விருமபல. வள்ளல - வரையாது கொடுப்போன். வானவாகோன-தேவர்க கரசன், இநதிரன்.

---

* மாணி - பிரமசாரி, இஙகு மாாககணடேயரைக் குறிததது நின்றது † கறுததல - கோபிததல ‡ ஓதம - நீாப்பெருககு $ வேலை - சமுததிரம ¶ வெஙகுரு - சீாகாழி

*ஏறு - இடபம. தெள்ளுநீா - தெளிநத நீா, சுதத நீா.
கஙகையானது பரமசிவனது அருட சததியாகிய உமாதேவி
யாரது திருகரததிற றேன்றினமையாலும பின்னா அவ
ரது திருச்சடையிற சோநதமையாலும நிருமலமுடைய
தாதல் பறறி இஙகு தெள்ளுநீாக கஙகை எனபபடடது
என றறிக.*

வானவாகோன் தோள் துணித்தது — வெஞ்சுடரோன்
பல்லிறுத்த *கதையிற காண்க.*

கஙகையைச சடையில் வைததது — *முனனொரு நாள
உமாதேவியாா திருக கைலாச மலையிலுள்ள சோலையிலே
ஒரு விளையாடடாகச சிவபெருமானுடைய கண்களைப்
பொத்தினா சிவபெருமானுடைய கண்களே மறறைச
சோதிகள அனைததிறகும காரணமா யிருததலால சூரியன
சநதிரன் அககினி ஆகிய இவாகளின் சுடாகளும மறறைத
தேவாகளின ஒளிகளும பிற ஒளிகளும அழிநது எஙகும
ஓரே இருளாக அதனுல உயிாகளெலலாம வருநதின.
பிராடடியாா பிரானது கண்களைப பொததியகாலம வெகு
நுடபமான ஒரு கணமேயாயினும அககணம் உயிாகடகெல
லாம ஊழிககாலஙகளாயது அககாலததுப் பரம கருணை
நிதியாகிய அரனுா ஆன்மாககள படும துயரததை நீககி
அருளசெயயத திருவுளஙகொணடு, தமமுடைய நெறறியி
லே ஒரு கணணை யுண்டாககி, அதனுல அருளோடு நோககி,
புவனமெஙகும பரவிநினற இருளை நீககி, சூரியன முதலாயி
னோாககும ஒளியைக கொடுததாா. சிவபெருமானுடைய
இவவருள செயலை உமாதேவியாா நோககி அசசமெயதி,
அவருடைய கண்களைப பொததிய தமது கைகளை எடுகக
வும, தமது பதது விரலகளிலும வியாவை தோன்றியதைக
கணடு கைகளை யுதறினாா. அப பதது விரலகளினின றும*

உதிரந்த வியர்வைத் துளிகள் பத்தும் பத்துக் கங்கைகளாகி அக்கங்கைகளில் ஒவ்வொன்றும் பலலாயிர முகங்களைக் கொண்டு சமுத்திரங்களைப்போல எங்கும் பரவ, அரிபிரமேந்திராதி தேவர்களும் அந்தப் பிரவாகத்தைக்கண்டு திகிலடைந்து திருக்கைலாசபதியிடம் சென்று முறையிட்டார்கள் திருக்கைலாசபதி அந்நதியின் வரலாற்றை அவர்களுக்குச் சொல்லி, அதனை அழைத்துத் தமது திருச்சடையிலுள்ள ஓர் உரோமத்தின்மீது விடுத்தார். அதனைக்கண்ட பிரமாவும் விட்டுணுவும் இந்திரனும் அதில் ஒரு சிறிது தங்களுக்குத் தந்தருளும்படி வேண்ட, பரமசிவன் அவ்வாறே கொடுத்தனர். அவர்கள் அதனைக் கொண்டுபோய்த் தத்தம் நகர்களில் விடுத்தார்கள். பிரமலோகத்தை யடைந்த கங்கை பகீரத ராசனுடைய தவத்தினால் பூமியின் மீண்டுவர, சிவபெருமான் பின்னும் அதனைத் தமது சடையிற்றாங்கி அதன் வேகத்தை அடக்கி, பின் இப்பூவுலகிற் செல்லும்படி விடுத்தார் அந்நதி சகரர்கள் யாவரும் மேற்கதி பெறும்படி அவர்களுடைய எலும்பிற் பாய்ந்து சமுத்திரத்திற் பெருகியது. இக்காரணம் பற்றிப் பூமியில் வந்த கங்கை பகீரதி எனறழைக்கப்பட்டது மற்றை இரண்டு நதிகளும் தாம் புகுந்தவிடங்களில் இருந்தன. இவ்விதமாகச் சிவபெருமானது அருட்சத்தியாகிய உமாதேவியாருடைய திருக்கரத்திற் றோன்றிய கங்காதீர்த்தம் உலகங்களை அழியா வண்ணம் அடக்கிய வுண்மையை அவர் முன்னாளில் ஒரு பெண்ணைச் சடையில் தாங்கினரெனபர.

''மலைமகளை யொருபாகம் வைத்தலுமே மற்றொருத்தி
சலமுகத்தா லவன்சடையிற் பாயுமது வென்னேடீ
சலமுகத்தா லவன்சடையிற் பாயந்திலளேற் றரணியெல்லாம்
பிலமுகத்தே புகப்பாய்ந்து பெருங்கேடாஞ் சாழலோ''

திருவாசகம்

௬. பூவார்ந்த சென்னிப புனிதா போற்றி
புத்தேளிர் போற்றும பொருளே போற்றி
தேவார்ந்த தேவர்க்குந் தேவே போற்றி
திருமாலுக் காழி யளித்தாய் போற்றி
சாவாமே காத்தென்னை யாண்டாய் போற்றி
சங்கொத்த நீற்றெங் சதுரா போற்றி
சேவார்ந்த வெல் கொடியாய் போற்றி போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி.

குறிப்புரை:—பூ ஆர்ந்த சென்னிப் புனிதன்-கொன்றை, ஊமத்தை, தும்பைப் பூங்கண்ணி பொருந்திய முடியையுடைய பரிசுத்தன் (நிமலன்). புத்தேளிர் - தேவர்கள் தே ஆர்ந்த தேவர்க்கும் தே - தேவரில் சிறந்தவர்களாகிய அரி பிரமேந்திராதி தேவர்க்கும் மேலான கடவுள். தேவார்ந்த தேவனை ' என்றார் பிறிதோரிடத்தில. 'தேவர்கோ அறியாத தேவதேவன், என்பது மணிவாசகர் திருவாக்கு. ஆழி - சக்கராயுதம். அளித்தல் - கொடுத்தல். ' சாவாமே காத்து என்னை ஆண்டாய ' என்றது நாயனார் சைவ சமயத்தினின்றும் சமண சமயத்திற புகுந்து, திருநாமம் அஞ்செழுத்தும் செப்பாராகி, தீவண்ணர் திறம ஒருகாற் பேசாராகி, ஒருகாலும திருக்கோயில் சூழாராகி, உண்பதன் முன மலர் பறித்திட்டு உண்ணாராகி, அருநோயகள் கெட வெண்ணீறு அணியாராகி, பெருநோயகள மிக நலியப்பெயர்த்தும் செத்துப் பிறப்பதற்கே தொழிலாகி இறக்கவிருந்த தம்மை அவ்வாறு சாவாவண்ணம தடுத்து ஆட்கொண்டமையைக் குறித்து உரைத்ததாகும் என்றறிக. சங்கொத்த நீறு - சங்கு போலும வெள்ளிய திருநீறு. சதுரன் - சமர்த்தன். சே ஆர்ந்த வெல் கொடி - இடபம் பொருந்திய வெற்றிக்கொடி.

திருமாலுக்கு ஆழி அளித்தது:—முன்னொரு நாள் இந்திரன் திருக்கயிலாச மலையிலே சிவபெருமானை வழிபட எண்ணி, அகந்தைகொண்ட மனதுடன் செம்பொற்றிருக் கோயில் வாயிலிற் போயினன். அப்போது சிவபெருமான் ஒரு பிரமதகண வேடங்கொண்டு அவ்வாயிலில் நின்றார். இந்திரன் அவரை நோக்கி, "நீயார்? நாம் சிவபெருமானைக் காணவந்தோம். அதற்கு இது நல்ல சமயமா? சொல்லு" என்றான். சிவபெருமான் பதில் ஒன்றும் சொல்லாது அசசந்தரும் நோக்கத்தோடு நின்றார். அப்போது இந்திரன் கோபங்கொண்டு குலிசாயுதத்தை அவர்மேல் எறிந்தான். அது அவர்மேற்படவும் நுண்ணிய துகளாயழிந்தது. உடனே பரமசிவன் பூதகண வடிவத்தை நீங்கி உருத்திர வடிவைத் தாங்கி, பிரமா முதலிய தேவர்களும் மற்றையுயிர்களும் அஞ்சும்படி உக்கிர வடிவுகொண்டு உருத்து நின்றார். இவ்வாறு நின்ற எம்பெருமானுடைய நிலையைக் கண்ட இந்திரன் பயந்து தருக்கொழிந்து அவரை வணங்கித் துதித்துத் தன் பிழையைப் பொறுத்தருளுமாறு வேண்டினன். சிவபெருமான் இந்திரன்மேல் கிருபாநோக்கஞ் செய்து, தமது கோபத்தைச் சமுத்திரத்தில் வீசினார். அவ்வாறு வீசப்பட்ட கோபமானது ஒரு அசுரக் குழந்தை வடிவத்தை அடைந்து சமுத்திர ராசனால் வளர்க்கப்பட்டு அதனால் சலந்தரன் என்னும் நாமம் பெற்றது. சலந்தரன் யௌவன பருவத்தை அடைந்ததும் பூமியில் வந்து அவுணருடன் சேர்ந்து தேவர்களை வருத்த, அவர்கள் அஞ்சியோடி மேருமலையில் ஒளித்தார்கள். சலந்தரன் அங்கே சென்று தேவர்களை வருத்தி அவர்களைக் காக்கும்படி வந்து தன்னுடன் கொடிய போரினைச்செய்த விட்டுணுவைத் தோற்கடித்தான். பிறகு தேவர்கள் இந்திரனுடன் கயிலையங்கிரியை யடைந்தார்கள். சலந்தரன் அதனையறிந்து, தான் விட்டுணுவைப் போரில்வென்ற இறுமாப்பினால் 'சிவனையும் போரில்வென்று இந்திரனுக்கும் தேவர்களுக்கும் தீங்கிழைப்பேன்' என்று உரப்பிக்கொண்டு கயிலைக்குச் சென்றான். போகும் வழியில் பரமசிவன் ஒரு வயோதிகப்

பிராமண வேடங்கொண்டு அவனெதிரிற் றோன்றி, 'நீ எங்கே போகின்றாய்?', என்று கேட்க, அவன், 'நான் சிவனுடன் போர்செய்யப் போகிறேன்' என, "அப்படியானால் இப்போது உன் பலத்தை என்னிடம் காட்டு பார்க்கலாம்" என்று அங்குப் பூமியினிடத்தில் தம்முடைய திருவடி விரலால் ஒரு சக்கரத்தைக் கீறினார். அது ஒரு சக்கராயுதமாயிற்று. அப்போது சிவபெருமான் சலந்தரனை நோக்கி, 'இதனை உன் சிரத்தில் தாங்கவல்லையோ?' வென்ன, சலந்தரன் அதனைக் கையிலெடுத்துச் சிரசின்மேல் தூக்கி வைத்து அதன் பாரத்தைத் தாங்கமுடியாது உடம்பு பிளந்து கீழே விழுந்து இறந்தான். இந்திரனும் தேவர்களும் துன்பம் நீங்கி எம்பெருமானைத் துதித்து விடைபெற்றுத் தங்கள் இருப்பிடத்துக்குச் சென்றார்கள். சக்கரப்படை சிவபெருமானை அடைந்தது.

பின்னொரு காலத்தில் இராக்கதர்கள் உலகங்களைப் பிடித்துத் தருமவிக்கினஞ் செய்ய, அவர்களால் நலிவடைந்த தேவர்கள் விட்டுணுவை யடைந்து முறையிட்டார்கள். திருமாலனவர் அத்தேவர்களை இரட்சிக்கத் திருவுளங்கொண்டு மிகப் பலசாலிகளாகிய அவ்விராக்கதர்களை வெல்வதற்கான சக்தியைப் பெறவெண்ணிச் சிவபெருமானது ஆயிரந் திருநாமங்களையுந் தியானித்து ஆயிரஞ் செந்தாமரை மலர்களால் சிவபெருமானை நெடுநாட்கள் அருச்சித்து வந்தார். அவர் அவ்வாறு அருச்சிக்கையில் ஒருநாள் ஈசுவர சங்கற்பத்தால் ஒருபூக் குறையவும் திருமாலானவர் சிவபூசா நியமனத்துக்கு விக்கினம் வருவதைச் சகியாது செந்தாமரை மலரை நிகர்த்த தமது கண்களிலொன்றைப் பறித்து அருச்சித்தனர். உடனே பத்திவலையிற் படுபவராகிய சிவபெருமான் பிரசன்னராகித் தமது கையிலிருந்த சக்கராயுதத்தை அவருக்குக் கொடுத்தருளினார் என்பதாம். இதற்குப் பிரமாணம்:—

பங்கய மாயிரம் பூவினிலோர் பூக்குறையத்
தங்க ணிடந்தரன் சேவடிமேற் சாத்தலுமே
சங்கர னெம்பிரான் சக்கரமாற் கருளியவா
றெங்கும் பரவிநாந் தோணோக்க மாடாமோ

திருவாசகம்.

நீற்றினை நிறையப் பூசி நித்தலா யிரம்பூக் கொண்டு
ஏற்றழி யொருநா ளொன்று குறையக்கண் ணிறைய விட்ட
ஆற்றலுக் காழி நல்கி யவன்கொணர்ந் திழிச்சுங் கோயில
வீற்றிருந் தளிப்பர் வீழ மிழலையுள விகிர்த னாரே.

அப்பர்.

இடபக்கோடியின் வரலாறு:—சர்வசங்கார காலத்தில் அரனதாணையால் அண்டமுழுவதும் அக்கினிக் கிரையாகி அழிக்கப்பட்ட அவசரத்தில அழியாதுநின்ற அறக்கடவுள் ஆனேறுருத்தாங்கி அமலன் அருகிற்சென்று அஞ்சலி செய்து அவரது அநுக்கிரகத்தை அவலம்பித்து நிற்க, அப்போது அந்திவண்ணா அவ்விடபத்தின்மேல் ஆரோகணித்து, சர்வசங்கார காலத்தும் அழிவடையாது நிற்கும் ஆற்றலினையுடையது அறமொன்றே ஆகுமென்னும அரிய வுண்மையினை ஆன்மாக்கள அறிந்து அவ்வறத்தினை ஆசரித்தொழுகி அருட்பெருஞ் செல்வத்தை அடையும அவாவினால் அவவறத்தின் அடையாளமாய் அமாந்த இடபத்தின் உருவத்தை எழுதிய ஓவியத்தைத் தமது கொடியாக நிறுத்தினர் என்றறிக.

ம. பிரமன்றன் சிரமரிந்த பெரியோய் போற்றி
பெண்ணுருவோ டாணுருவாய நின்றாய் போற்றி
கர(ம்) நான்கு(ம) முக்கண்ணு முடையாய் போற்றி
காதலிப்பார்க் காற்ற வெளியாய் போற்றி
அருமந்த தேவர்க் கரசே போற்றி
அன்றாக்க னைந்நான்கு தோளுந் தாளும
சிர(ம) நெறித்த சேவடியாய் போற்றி போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி

குறிப்புரை:—பெண்ணுருவோடு ஆணுரு-அர்த்த நாரீசுர மூர்த்தம். கரம் நான்கு—வலப்புறத்தில் தமருகம் (உடுக்கை) தாங்கியதொன்றும் மூவிலை வேற்சூலம் பற்றியதொன்றும், இடப்புறத்தில் மான்கன்று பிடித்ததொன்றும் அனல் ஏந்தியதொன்றும் ஆக நான்கு. இவற்றுள், முதற்கரத்திலுள்ள உடுக்கையின் சப்தத்தினால் படைத்தற்றொழிலும், இரண்டாவது கரத்திலுள்ள சூலத்தினால் அபயமும் மூன்றாவது கரத்தினால் வரதமும் ஆகிய இருவகைப் பாகுபாட்டினதாகிய காத்தற்றொழிலும், நான்காவது கரத்திலுள்ள அக்கினியினால் அழித்தற்றொழிலும் நிகழுமென்பர். இன்னும் சிவபெருமானது பஞ்சகிருத்தியங்களுள் மேற்கூறிய மூன்றினையும் நீக்கி, எஞ்சிநின்ற மறைத்தற்றொழில் அவரது நடராச மூர்த்தத்தின் ஊன்றிய பாதத்திலும் அருளற்றொழில் தூக்கிய திருவடியிலும் நிகழுமென்பதும் கற்றவர் கூற்று.

முக்கண்—வலக்கண் இடக்கண் நெற்றிக்கண் என மூன்று. இவை முறையே சூரியன் சந்திரன் அக்கினி என்னும் முச்சுடர்களின் இருப்பிடமாகும். அன்றியும், இம்மூன்று கண்களும் சிவபெருமானது பஞ்ச சத்திகளில் ஆன்மாக்களுக்கு முத்தியின்பமளிக்க விரும்புதலாகிய இச்சாசத்தியையும், ஆன்மாக்களின் கருமங்களையறிந்து ஊட்டுதலாகிய ஞானசத்தியையும், ஆன்மாக்களுக்கு வேண்டுவனவற்றைக் கொடுத்து இரட்சித்தலாகிய கிரியாசத்தியையும் குறிக்குமென்பதும் ஆன்றோர் கட்டுரை.

சிவபெருமானது நெற்றிக்கண்ணின் வரலாறு-முன்னர்க் கங்கையைச் சடையில்வைத்த கதையிற் கூறப்பட்டிருத்தலைக் காண்க.

காதலிப்பார்க்கு ஆற்ற எளியன் - அன்பு செய்பவர்க்கு மிகவும் சுலபமானவன்; காதலாகிக் கசிந்து கண்ணீர்மல்கி ஓதுவார்தமை நன்னெறிக் குய்ப்பது', 'காதலாலே கருதுந் தொண்டர் காரணத்தராகி நின்றே பூதம் பாடப்புரிந்து நட்டம் புவனியேத்த ஆடவல்லீர்' என்றார் பிறரும். அரு

மாந்த - அருமருந்தன்ன ; (அருமருந்து - அமிர்தம் - சாவா மருந்து) தேவர்கள் அமிர்தத்தையுண்டு நெடுங்காலம் சாவா திருக்கும் பேறுபெற்றதனால் 'அருமந்த தேவ' ரெனப் பட்டார் என்றறிக. அரக்கன் - இராக்கதன். 'ஐந்நான்கு தோள்' என்றதனால் அரக்கனென்னும் பதம் இங்கு இராவணனைக் குறித்து நின்றது சே அடி - சிவந்த பாதம்

பிரமன் சிரமரிந்தது:—முன்னொரு நாளில் விட்டுணுவும் பிரமாவும் மேருமலையில் இருக்கும்போது முனிவர்களும் தேவர்களும் அவர்களிடஞ்சென்று வணங்கி, திரிமூர்த்திகளில் மேலானவர் யாவரென்று வினவினார்கள் அப்போது பிரமா தாமே மேலானவரென்ன, விட்டுணுவும் அவ்வாறே கூறினார். அவ்வாறு கூறிய இருவரும் உடனே தம்முள் மாறுபட்டுப் பூசலிட்டார்கள் அப்போது சிவபெருமான் அமலமாகிய சோதிவடிவாய் ஆகாயத்திலே தோன்றி, அச் சோதியினிடையே தாம் உமாசமேதராய்த் திருக்கைலாச மலையில் வீற்றிருக்கின்ற திருக்கோலத்தோடு நின்றார். உடனே விட்டுணு மாயையினீங்கி எழுந்து வணங்கினார். பிரமாவோ அவ்விதம் செய்யாது தமது உச்சிச்சிரசிலுள்ள வாயினால் சிவபெருமானை இகழ்ந்தார். பிரமாவின் அகந்தையைக்கண்ட சிவபெருமான் அவர்மேற் சிறிதும் சினங் கொள்ளாதவராய் அவருடைய பாவத்தைத் தொலைக்கவும், மற்றைத் தேவர்கள் முனிவர்கள் முதலாயினாருடைய அகந்தையைக் கெடுக்கவும் நினைத்து, தமது திருவுள்ளத்தினின்று வயிரவரைத் தோற்றுவித்து, செயற்பாலதை அவ்வயிரவருக்குக் கூறியருளிச் சோதியில் மறைந்தார். சோதியும் மறைந்தது. உடனே வயிரவக்கடவுள் சிவபெருமான் தமக்குக் கூறியவண்ணம் பிரமாவினுடைய உச்சிச் சிரசைக் கிள்ளிக் கையிலேந்தினார். அதனால் பிரமா உயிரிழக்கவும், வயிரவக்கடவுள் அவருக்கு உயிரைக் கொடுத்தார். பிரமா எழுந்து நலனுணர்வு வரப்பெற்று வயிரவரை வணங்கித் துதித்தார். பிறகு வயிரவக்கடவுள் மேருமலையை நீங்கிப் போய், தருக்குற்ற முனிவர்களும் தேவர்களும் இருக்கு

பிடஙகளிற் சென்று, அவாகள உடம்பிலுள்ள இரததத தைதத தமது கரத்திலேநதிய பிரமகபாலததில் பிக்ஷை யாக ஏறறு, அதனுல உயிரிழநத அவர்களுககும் மீட்டும உயிரைக கொடுததது, அவர்களுடைய மனககளஙகஙகளேயும் மாறறி, பிறகு விட்டுணுவிடம சென்று அவரது சிரசி லுள்ள இரததத்தையும பிக்ஷையேறறு, அண்டகடாகத திற செனறு அஙகு வைரவபுவன பதததிலிருந்து, மணி தாகளேயும தேவாகளேயும துன்பநீங்கக காததுவநதாா என் பதாம.

இவவயிரவககடவுள் சாவசஙகார காலததில பிரமாதி தேவாகளது சிரஙகளேச சேதிதது, உயிர்களெலலாவறறை யும சஙகரிதது. புவனஙகள எலலாவற்றையும பொடியாககி வேதமாகிய நாயவாகனததிலேறி உலாவுவா.

திருச்சிறறமபலம்